ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞாநாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தம் - க௦.] மன்மத௵ மாசி௴. [எண் - உ.

வேதாகமப்பிரகரணம்.

யஜுர்வேத சம்பந்தமான

ஸ்கந்தோபநிடதம்.

సహనావవత్వితిశాంతిః.

ఓం॥ అచ్యుతోఽస్మి మహాదేవ తవకారుణ్య లేశతః।
విజ్ఞానఘన ఏవాస్మి శివోఽస్మి కిమతః పరం ।
న నిజం నిజవద్భా త్యంతఃకరణ జృంభణాత్ ।
అంతఃకరణ నాశేన సంవిన్మాత్ర స్థితో హరిః।
సంవిన్మాత్ర స్థితశ్చాహ మజోఽస్మి కిమతః పరం ।
వ్యతిరిక్త జడం సర్వం స్వప్నవచ్చ వినశ్యతి ।
చిజ్జడానాంతు యోద్రష్టా సోఽచ్యుతో జ్ఞానవిగ్రహః ।
సఏవహి మహాదేవ స్సఏవహి మహాహరిః ।
సఏవ జ్యోతిషాం జ్యోతి స్సఏవ పరమేశ్వరః ।
సఏవహి పరంబ్రహ్మ తద్బ్రహ్మాహం నసంశయః ॥

ஓம் !=மங்களம். மகாதேவனே ! தம்முடைய சொற்ப கிருபை யடைந்த மாத்திரத்திலே நான் அழிவில்லாதவனானேன் ; அளவில்லாத விஞ்ஞானகனத்தையும், சுபத்தையும் அடைந்தேன் ; இதைக்காட்டிலும் மேலானது யாது ? மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலான அந்தக்கரணங்களின் வேறுபாட்டின் தத்தளிப்பினாலே மெய்யானது பொய்யாகின்றது. அந்தக்கரணம் நாசமடைவதினாலே, ஸ்ரீஹரி ஞாநாநந்த சொரூபமுடையவராய் விளங்குகின்றார். நானும் ஞான சொரூபத்தை யடைந்திருப்பதினால் பிறப்பில்லாதவனாயிருக்கிறேன் ; இதற்கு மேலானது யாது ? ஞானத்துக்கு விரோதமான தேக முதலிய எல்லாச்சடப்பொருளும் சொப்பனத்திற்கண்ட வஸ்துக்கள்போல் அழிந்துபோகின்றன. சித்து, அசித்து என்னும் ஆன்மாக்களையும், பிரபஞ்சங்களையும் யாவன் கருணையால் பார்க்கிறானோ, அவனே ஞானசொரூபியாகிய அச்சுதன் ; அவனே மகாதேவன் ; அவனே மகாஹரி ; அவனே ஜோதிகளுக்கெல்லாம் காரணமா யிருக்கிற ஜோதிசொரூபன் ; அவனே பரமேஸ்வரன் ; அவனே பிரம்மம். அந்தப் பிரம்ம சொரூபமே நான் ஆவேன் என்பதற்குச் சந்தேகமில்லை.

జీవశ్శివ శ్శివోజీవ స్సజీవః కేవలశ్శివః ।
తుషేణ బద్ధో వ్రీహి స్స్యాత్తుషా భావేతు తండులః।
ఏవం బద్ధ స్తథా జీవః కర్మనాశే సదాశివః ।
పాశబద్ధ స్తథా జీవః పాశముక్త స్తథా శివః ।
శివాయ విష్ణురూపాయ శివరూపాయ విష్ణవే ।
శివస్య హృదయం విష్ణు ర్విష్ణోశ్చ హృదయగ్ం శివః ।
యథాంతరం న పశ్యామి తథామే స్వస్తిరాయుషి ।
యథాంతరం న భేదాస్స్యు శ్శివకేశవ యో స్తథా।

(அந்தப்பிரம்மம் எங்கும் மங்களமாய் வியாபித்திருப்பதினாலே) ஜீவனே சிவன் ; சிவனே ஜீவன். அந்த ஜீவனே மேலான சிவ(சொரூபத்தை யடைந்தவ)னாம். உமியினால் கட்டுண்டது நெல்லாகிறது, உமி நீங்கினது அரிசியாகிறது. அப்படிப்போல ஜீவனும் (கருமமானதேகத்தில்) கட்டுண்டிருக்கிறான். அக்கருமம்நாசமாவதினால் என்றும் மங்களசொரூபனாயிருக்கிறான். பாசத் தாற்கட்டப்பட்டவன் ஜீவனாகிறான் ; அப்பாசத்தைவிட்டவன் சிவசொரூபனாயிருக்கிறான். விஷ்ணுசொரூபத்தை யடைந்த சிவனையும், சிவசொரூபத்தை யடைந்த விஷ்ணுவையும் வணங்குகின்றேன். சிவனுடைய இருதயமே விஷ்ணு ; விஷ்ணுவினுடைய இருதயமே சிவன். இவ்

விருவரிலும் பேதமே காணவில்லை. அப்படியே எனக்கும் மறுபிறவியில்லாத ஸ்திரமான பூரணுயுசு உண்டாகக்கடவது. பேதமானது சிவகேச வர்களுக்கு இல்லை.

దేహో దేవాలయః ప్రోక్తో జీవోదేవ స్సదాశివః।
త్యజేదజ్ఞాన నిర్మాల్యం సోహం భావేన పూజయేత్ ।
అభేద దర్శనం జ్ఞానం ధ్యానం నిర్విషయం మనః ।
స్నానం మనోమలత్యాగ శ్శౌచ మింద్రియ నిగ్రహః ।
బ్రహ్మామృతం పిబేద్భైక్ష మాచరే ద్దేహరక్షణే ।
వసేదే కాంతి కో భూత్వా చైకాంతే ద్వైత వర్జితే ।
ఇత్యేవ మాచరే ద్ధీమాన్ సఏవం ముక్తి మాప్నుయాత్ ।
శ్రీమత్పరమ ధామ్నే స్వస్తి చిరాయుష్యే న్నమఇతి ॥

சரீரம் தேவனுக்கு ஆலயமாயிருக்கச் சமைக்கப்பட்டது. அதில் ஜீவனும் எப்போதும் மங்களமான தேவசொரூபத்தை யடைந்து இருக்கிறுன். அந்த ஜீவன் நிருமாலியமாகிய அஞ்ஞானத்தை நீக்கி, சிவசொரூபமாவேனெனப் பாவித்து பூஜிக்கவேண்டும். (சிவகேசவர்களை) அபேதமாய் தரிசிக்கிறதே ஞாநம்; மனது வேருெரு விஷயத்திற் செல்லாம லிருப்பதே தியானம்; மனதினுலுண்டாகும் அஞ்ஞாநத்தைப் போக்கடிப்பதே ஸ்நாநம்; இந்திரிய விகாரத்தை நீக்குதலே சௌசம்; பிரம்ம நாமாமிருதமே பானம். பிக்ஷை யெடுத்து தேகத்தை ரக்ஷித்துக் கொள்ளும் யாத்திரையே யவசியம். தனியிடத்தில் மற்ருெருவரும் சேராமலிருந்து ஒருவனுகவே வாசம் பண்ண வேண்டியது. இப்படி எவன் புத்திவர்தன யிருக்கின்றுனே, அவன் முக்தியை அடைகின்றுன். இன்பத்தையும், சிரஞ்சீவித்துவத்தையும் அடையும் பொருட்டு ஸ்ரீமத்பரஞ்சோதிசொரூபனை நமஸ்கரிக்கிறேன்.

విరించి నారాయణ శంకరాత్మకం నృసింహదేవశ తవ
ప్రసాదతః ।
అచింత్య మవ్యక్త మనంత మవ్యయం దేవాత్మకం
బ్రహ్మ నిజం విజానతే ।
తద్విష్ణోః పరమం పదగ్ సదా పశ్యంతి సూరయః ।
దివీవ చక్షురాతతం । తద్విప్రాసో విపన్యవో
జాగృవాం సస్సమింధతే విష్ణోర్యత్పరమం పదం ।
ఇత్యేవం నిర్వాణానుశాసనం వేదానుశాసన మిత్యుప
నిషత్ ॥

விரிஞ்சி, நாராயண, சங்கர சொரூபமான ஏ! நாரசிங்கா! ஏ! தேவதேவா! உம்முடைய அருளினுல், சிந்திக்கப்படாததாயும், காணப்படாததாயும், முடிவில்லாததாயும், அழிவில்லாததாயும், பரமாத்துமாவாயு மிருக்கிற பிரமத்தின் உண்மையான சொரூபத்தைக் காண்கிருர்கள். அந்த (பரப்பிரம்மமாகிய) விஷ்ணுவினுடைய பரமபதத்தை நித்தியசூரிகளாகிய பரமஞானிகள் எப்போதும் பார்க்கிருர்கள். ஆகாயம் போன்ற பரிசுத்தமான ஞாநக்கண்களினுலே தரிசிக்கும் அர்தப்பிராமணர்கள் எஞ்ஞான்றும் நிமைகொட்டாமல் விழித்துக்கொண்டு, விஷ்ணுவினுடைய பரமபதத்தை பலவிதமாகத் துதிசெய்கின்ருர்கள். இவ்வண்ணம் மோக்ஷ சாதனமாக வேதம் உறுதி கூறுகின்றது என்று உபநிடதம்.

ஸஹநாவவத்விதி ஶாந்திஃ.

திரவிட வேதம்.

ஆணல்லன் பெண்ணல்ல னல்லா
வலியு மல்லன்
காணலு மாகா னுள னல்லன்
னில்லை யல்லன்
பேணுங்காற் பேணு முருவாகு
மல்லனு மாம்
கோணை பெரி துடைத் தெம்
பெம்மானைக் கூறுதலே.

பலபலவே யாபரணம் பேரும்
பலபலவே
பலபலவே சோதி வடிவும்
பண் பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று
மோந் தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணை
மேலாற் கேயோ.

ஏகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி
பல மூர்த்தி
ஆகி யைந்து பூதமா யிரண்டு
சுடரா யருவாகி
நாகமேறி நடுக்கடலுட் டுயின்ற
நாராயணனே யுன்
ஆகமுற்று மகத் தடக்கி
யாவி யில்லன் மாய்த்ததே.

ஒன்றெனப் பலவென
வறிவரும் வடிவினு ணின்ற
நன்னெறி ஞரண ஞன்முக
னர னென்னு மிவரை
ஒன்றநும் மனத்து வைத்
துள்ளி நும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ் செய்தவ னிடை
நம்முடைய நாளே.

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

சிருஷ்டி.

(சு-ம் பக்கத் தொடர்.)

తస్మిన్నండే స భగవాన్ ఉషిత్వా పరివత్సరం ।
స్వయ మేవాత్మనో ధ్యానాత్ తదండ మకరో ద్ద్విధాః ॥

அந்தப் பகவானாகிய பிரமன் அண்டத்தில் ஒருவருஷம்வரைக்கு மிருந்து, பரமாத்மாவைத் தியானித்தவனாய், அவ்வண்டத்தை (சுவர்க்கமும் பூமியுமாய்) இரண்டு கூறுக்கினான்,

మధ్యే వ్యోమ దిశశ్చాష్టా వపాం స్థానం చ శాశ్వతం ॥

இடையிலுள்ள விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும், அஷ்டதிக்குகளையும் பிரளயகாலம் வரைக்குமுள்ள சமுத்திரத்தையும் உண்டாக்கினான்.

ఉద్బబర్హాత్మన శ్చైవ మనస్సద సదాత్మకం ।
మనశ్చా ప్యహంకార మభిమంతార మీశ్వరం ॥

பிரமன் தன்னுடைய மனதை சற்சொரூபமாகவும், அசற்சொரூபமாகவும் செய்தவனாகி, மனதினால் அகங்காரத்தை யுண்டாக்கி, அவ்வகங்காரத்தை யபிமானித்த சிவனை யுண்டாக்கினான்.

మహాంత మేవ చాత్మానం సర్వాణి త్రిగుణానిచ ।
విషయేణాం గ్రహీతౄణి శనైః పంచేంద్రియాణిచ ॥

மகத்தத்துவத்தையும், பிராணனையும், சமஸ்த ஆத்மாக்களுக்குண்டான முக்குணங்களையும், விஷயங்களையும், பஞ்சேந்திரியங்களையும் படைத்தான்.

తేషాంత్వవయవాన్ సూక్ష్మాన్ షణ్ణా మప్య మితౌజసాం ।
సన్నివేశ్యాత్మ మాత్రాసు సర్వ భూతాని నిర్మమే ॥

மகத்து, அகங்காரம், மனது, தன்மாத்திரை, ஞானகர்மேந்திரியங்களின் சூக்ஷ்மா வவயவங்களைத் தன்னுடைய ஜீவாம்சத்திற் சேர்த்தவனாய் சருவபூதங்களையும் சிருஷ்டித்தான்.

సర్వేషాంతు సమానాని కర్మాణి చ పృథక్ పృథక్ ।
వేద శబ్దేభ్య ఏవాదౌ పృథక్సంస్థాశ్చ నిర్మమే ॥

சருவான்மாக்களுக்கும் சமானமாகக் கருமங்களை நிருமித்தான். வேதசப்தங்களிலிருந்து பிரத்தியேகமாய் மரியாதைகளை ஏற்படுத்தினான்.

కర్మాణాంతు వివేకాయ ధర్మా ధర్మాద్య వేచయత్ ।
ద్వంద్వైరయోజయచ్చేమాన్ సుఖదుఃఖాదిభిః ప్రజాః ॥

கருமங்களினுடைய விவேகத்தின்பொருட்டு, தருமாதருமங்களையுங் கற்பித்தான். இந்த பிரஜைகளுக்கு சுகதுக்கமுதலிய தொந்தங்களை நல்லயோசனையுடன் செய்தான்.

లోకానాంతు వివృద్ధ్యర్థం ముఖ బాహూరు పాదతః ।
బ్రాహ్మణం క్షత్రియం వైశ్యం శూద్రంచ నిరవర్తయత్ ॥

உலக விருத்தியின்பொருட்டு முகம், புஜம், தொடை, பாதம் இவைகளில் முறையே பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களைச் சிருஷ்டித்தான்.

సర్వస్యాస్యతు సర్గస్య గుప్త్యర్థం స మహాద్యుతిః ।
ముఖ బాహూరు పజ్జానాం పృథక్కర్మాణ్య కల్పయత్ ॥

மகத்தத்துவத்திலுண்டான அந்த இரண்ணியகர்ப்பன் சருவபிரபஞ்சரக்ஷகத்தின்பொருட்டு முகம், புஜம், தொடை, பாத மிவைகளிற்பிறந்தவர்களுக்கு வெவ்வேறுகருமங்களைக்கற்பித்தான்.

சுபாலோபநிடதம்.

తస్మాత్తమస్సం జాయతే । తమసో భూతాది ।
భూతాదేరాకాశః । ఆకాశాద్వాయుః । వాయోరగ్నిః ।
అగ్నేరాపః । అద్భ్యః పృథివీ । తదండం సమభవత్ ।
తత్సంవత్సర మాత్ర ముషిత్వా ద్విధాకరో
దధస్తాద్భూమి ముపరిష్టాదాకాశం మధ్యే పురుష ఇతి ॥

அப்படி, ஈச்சுவரனால் தமசுபிறந்தது. தமசினால் பூதாதிகளும், பூதங்களால் ஆகாசமும், ஆகாசத்தினால் வாயுவும், வாயுவால் அக்கினியும், அக்கினியால் ஜலமும், ஜலத்தால் பிருதிவியும், பஞ்சபூதங்களால் அண்டமும் பிறந்தது. அவ்வண்டத்தில் புருஷன் ஒருவருஷகால மிருந்து அதை இரண்டுபாகமாக்கி, கீழ்ப்பாகத்தை பூமியாகவும், மேற்பாகத்தை ஆகாசமாகவும் செய்தவனானான்.

தைத்திரியம்.

బ్రాహ్మణోస్యముఖమాసీత్ । బాహూరాజన్యః కృతః ।
ఊరూతదస్యయద్వైశ్యః । పద్భ్యాగ్ంశూద్రోఅజాయతేతి ॥

விராட்டுப்புருடனுடைய முகம், தோள், தொடை, பாதமுதலியவற்றில், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நான்கு வருணங்கள் உண்டாயின வென்பதாம்.

மகோபநிடதம்.

ఏకోహవై నారాయణ ఆసీత్ । సోన్యంకామంమనసా ధ్యాయత । తస్యధ్యానస్థస్యలలాటేత్స్వేదోత్పన్నరాఃతా అపో అభవన్ తాసు వీర్యమధా సృజత్ । తద్ధిరణ్మయ మండమభవత్ । తస్మాత్ బ్రహ్మా చతుర్ముఖో అజాయతేతి ॥

நாராயணனொருவனேயிருந்து மனசினால் மற்றொருவனைச்சிருஷ்டிக்கத் தியானித்தவனானான். அப்பொழுது நாராயணனுடைய லலாடத்திற் பிறந்த வேர்வையின் துளியால் ஜலம் பிறந்தது. அதனிடத்தில் தன்னுடைய வீரியத்தைச்செலுத்தினன். அப்பொழுது சுவர்ணமயமான அண்டம்பிறந்தது. அதில் சதுர்முகப் பிரமன் பிறந்தான் என்பதாம்.

ஆரீத ஸ்மிருதி.

నారాయణః పురా దేవో జలం సృష్ట్వా జలోపరి ।
సుప్త్వా సభోపర్యంతే శయనేతు శ్రియా సహ ॥

తస్య సుప్తస్య నాభౌతు మహత్పద్మ మభూత్కిల ।
పద్మ మధ్యే భవద్బ్రహ్మ వేద వేదాంగ భూషణః ॥

సచోక్త స్తేన దేవేన జగత్సృష్టౌ పునః పునః ।
సోపి సృష్ట్వా జగత్సర్వః సదేవాసుర మానుషం ॥

యజ్ఞ సిధ్యర్థ మనఘాన్ బ్రాహ్మణాన్ముఖతో సృజత్ ।
అసృజత్ క్షత్రియాన్ బాహ్వో ర్వైశ్యానప్యూరుదేశతః ॥

శూద్రాంశ్చపాదయో స్సృష్ట్వా తేషాంచైవానుపూర్వశః ।
యథాప్రోవాచ భగవాన్ బ్రహ్మయోనిః పితామహ ॥

பூருவத்தில் நாராயணன் என்னும் தேவன் ஜலத்தைச் சிருஷ்டித்து, அந்த ஜலத்தின்மேல் ஆதிசேஷனைப் படுக்கையாய் விரித்து, லக்ஷ்மீ சமேதனாக யோகநித்திரை செய்துகொண்டிருந்தான். அந்த ஆதிநாராயண மூர்த்தியினுடைய நாபியில் ஒருகமலம்பிறந்தது. அக்கமலமத்தியில் வேதவேதாந்தங்களினால் பூசிக்கப்பட்டிருக்கிற பிரமதேவன் பிறந்தான். இப்படிப்பிறந்த அந்தத்தேவனுக்கு உலகசிருஷ்டிசெய்ய உத்திரவு கொடுத்தான். அவனுத்திரவுபடி தேவாசுரமனிதர்களைச் சிருஷடித்தான். மனிதர்களில் யாக பூர்த்தி செய்யும்பொருட்டு, முகத்தினி லிருந்து பிராமணர்களையும், புஜத்திலிருந்து க்ஷத்திரியர்களையும், தொடையிலிருந்து வைசியர்களையும், பாதத்தி லிருந்து சூத்திரர்களையும் சிருஷ்டித்தான். இப்படி சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்கு முறைப்படி தருமங்களை உபதேசித்தவனானன்.

సృష్టే పరస్పర విరుద్ధానాం శ్రుతీనాం స్మృతీనాంచ ।
కల్పభేదేన వ్యవస్థా ద్రష్టవ్యా ఇతి సృష్టిః ॥

சிருஷ்டி விஷயத்தில் ஒன்றுக்கொன்று பேதமாகச் சுருதி ஸ்மிருதிகளிற் கண்டால் அவைகள் கற்பபேதங்களினா லுண்டான வியவஸ்தைகளென்று கொள்ளவேண்டும்.

(தொடரும்.)

இதிகாசபுராணப்பிரகரணம்.

இனிவரும் மநுவந்தரங்களின்விவரம்.

(விஷ்ணுபுராணத்திலிருந்து எடுத்தது.)

சூரியனுக்கு சமிக்கை என்று பத்தினியொருத்தியிருந்தாள். அவள் விசுவகர்மாவினுடைய புத்திரி. அவளுக்கு முன்சொல்லப்பட்ட சிராத்ததேவனென்கிற மனுவும், யமதருமராஜனும், யமுனாநதியும் ஆக மூவர் பிறந்தார்கள். அவள் தன் பர்த்தாவினுடைய தேஜசைச் சகிக்கமாட்டாதவளாய்த் தன்னிழலென்று சொல்லும்படி தன்னைப்போ லொருத்தியை யுண்டாக்கித் தன் பர்த்தாவுக்குச் சிசுருஷைசெய்யும்படி வைத்துத் தான் தவஞ்செய்யக் காட்டுக்குப்போனாள். சூரியன் அவளைத் தன்பத்தினியாகிய சமிக்கையென்றே நினைத்து அவளிடத்திற்சேர்ந்து சநியையும், மற்றொருமனுவையும், தபதியென்பவளையும்பெற்றான். இப்படியிருக்க, ஒருநாள் யமன் இந்தச் சாயாதேவியைத் தன் தாயென்றே நினைத்து உதைக்கப் போகையில், அந்தச் சாயை கோபமூண்டு யமனைச் சபித்தாள். அவ்வியமனுக்கு இவள் கருணையில்லாதவ ளாகையாலே தன்தாயன்றென்று தோன்றியது. பின்பு சூரியன் அச்சாயையால் உண்மையை விசாரித்து, யோகதிருட்டியினாலேயாலோசித்து சமிக்கை பெண்குதிரைவடிவாய் வனத்தில் தவஞ்செய்துகொண் டிருப்பதையறிந்தான். பிறகு சூரியன் தானும் குதிரைவடிவெடுத்துக்கொண்டு அவளிருக்கு மிடஞ்சென்று அவளிடத்தில் அசுவினி தேவதைகளிருவரையும், வீரியத்தின் கடைசிபாகத்தினாலே ரேவந்தனென்னு மொருவனையுமுண்டாக்கி மறுபடியும் அந்தச் சமிக்கையைத் தன்னிடங்கொண்டு சேர்த்தான்.

அதன்மேல், விசுவகர்மாவானவன் சூரியமண்டலத்தைச் சாணைச்சக்கரத்தில் வைத்துத் தேய்த்து எட்டிலொருபங்கு தேஜசைக் குறைத்துவிட்டான். இப்படி விசுவகர்மாவினாலே தேய்த்துத்தள்ளப்பட்ட தேஜோபாகமானது வெகுபிரகாசத்தோடு பூமியில் விழுந்தது. பூமியில்விழுந்த அந்தத் தேஜோபாகத்தைக் கொண்டு விசுவகர்மாவானவன் ஸ்ரீவிஷ்ணுவுக்குச் சக்கரத்தையும், சிவனுக்குச் சூலத்தையும், சுப்பிரமணியனுக்கு வேலாயுதத்தையும், குபேரனுக்குச் சிபிகையென்னு மாயுதத்தையும், மற்றைத்தேவர்களுக்குஞ் சில வுபகாரணங்களையும் விசேஷப் படுத்தினன்.

இதுநிற்க, எட்டாவது மனுவந்தரம் சாயை என்பவளுடைய இரண்டாங்குமாரர் சார்வர்ணியென்பவருடையதாகும். அதில் சுதபர், அமிதாபர், முக்கியரென்றுஞ் சொல்லப்பட்ட தேவர்களுண்டாவார்கள். அந்தத்தேவர்கள் கணம ஒன்றுக்கு இருபதிருபதின்மராக இருப்பார்கள். தீப்த்திமான், காலவர், இராமர், கிருபர், அசுவத்தாமா, பராசரர் குமாரரான வியாசர், ருசியசிருங்கர் ஆகிய இவர்கள் அந்த மநுவந்தரத்தின் சப்தரிஷிகள். ஸ்ரீவிஷ்ணுவின் அனுக்கிரகத்தினலே பரிசுத்தனய்ப் பாதாளமத்தியத்தில் வாசஞ்செய்திகொண்டிருக்கிற விரோசன குமாரனை பலி சக்கிரவர்த்தி அந்த மனுவந்தரத்தில் தேவேந்திரனவான். விரஜன், சர்வரீவான், நிர்மோகன் முதலான அந்த மநுவின் குமாரர்கள் ராஜாக்களாவார்கள்.

ஒன்பதாமனு தக்ஷசாவர்ணியென்பவராவார். அவரந்தரத்தில் வாரர், மரீசி,கருப்பர், சுதர்மாக்கள் என்கிற தேவர்கள் கணமொன்றுக்குப் பன்னிருவராக இருப்பார்கள். அத்தேவதைகளுக்கு அற்புதன் என்பவன் அதிபதியாவான். சவனன், தியுதிமான், அவியன், வசு, மேதாதிதி, ஜோதிஷ்மான், சத்தியன் என்னப்பட்டவர்கள் அப்போது சப்தரிஷிகள். திருதகேது, தீப்த்தகேது, பஞ்சஹஸ்தன், நிராமயன், பிருதுச்சிரவன் முதலானவர்கள் அந்தத் தக்ஷசாவர்ணிமனுவின் புத்திரர்கள் அரசுசெய்வார்கள்.

பத்தாமனு பிரமசர்வாணி யென்பவராவார். அவ்வந்தரத்தில் சுதர்மாக்கள், விருதர் என்கிற தேவர்கள் நூறுநூறுய்ச்சேர்ந்த கூட்டமாயிருப்பார்கள். அவர்களுக்கு மகாபலவானன சாந்தியென்பவன் இந்திரனவான். அந்த அந்தரத்தில் ஹவிஷ்மான், சுகிருதன், சத்தியன், தபோமூர்த்தி, நாபாகன்,அப்பிரதிமௌஜன், சத்தியகேது என்னுமவர்கள் சப்தரிஷிகளாவார்கள். சுக்ஷேத்திரன், உத்தமௌஜன், பூரிஷேணன் முதலாகப் பதின்மர் அம்மநுவின் குமாரருண்டு. அவர்கள் இப்பூமியை ரக்ஷித்து வருவார்கள்.

பதினேராமனு தர்மசாவர்ணி என்பவர். அவருடைய அந்தரத்திலே விகங்கமர், நிர்வாணர், ருசிகள் என்றுஞ் சொல்லப்பட்ட தேவக்கணங்களே முக்கியமானவர்கள். அவர்கள் கணமொன்றுக்கு முப்பதுமுப்பதுபே ரிருப்பார்கள். விருஷா என்பவன் அவர்களுக்கு இந்திரன். அப்போதிருக்கும் சப்தரிஷிகள் நிச்சரன், அக்கினிதேஜன், வபுஷ்மான், கிருணி, ஆருணி, அவிஷ்மான், அனகன் என்பவர்களாம். சர்வத்திரன், ஸ்வதர்மா, தேவானீகன் முதலான அந்தமனுவின்மக்கள் ராஜாக்களாவார்கள்.

பன்னிரண்டாமனு ருத்திரபுத்திரராகிய ருத்திரசாவர்ணியென்பவர். அவருடைய அந்தரத்தில் ருதுதாமா என்பவன் இந்திரனவான். அரிதர், ரோகிதர், சுமனசர், சுகர்மர், சுராபர் என்கிற தேவர் கூட்டமொன்றுக்குப் பத்துபேராக இருப்பார்கள். தபசுவீ, சுதபன், தபோமூர்த்தி, தபோரதி, தபோகிருதி, தபோதியுதி, தபோதனன் என்னு மிவ்வெழுவரும் சப்தரிஷிகள். தேவவான், உபதேவன், தேவசிரேஷ்டன் முதலான அந்த மனு புத்திரர் அரசரர்வார்கள்.

பதின்மூன்றுவதுமனு ரவுச்சியனென்னும்பெயரையுடையவர். சுத்திராமர், சுதர்மர் என்கிற தேவதைகள் கணத்துக்கு முப்பத்து மூவராக இருப்பார்கள். மகாவீரியவானன திவஸ்பதியென்பவன் அவர்களுக்கு இந்திரனயிருப்பான். நிர்மோஹன், தத்துவதர்சி, நிஷ்பிரகம்பியன், நிருச்சுகன், திருதிமான், அவியயன், சுதபன் என்பவர்கள் சபதரிஷிகளாவாகள். அம்மனுவின் புத்திரரான சித்திரசேனன் விசித்திரன்முதலானவர்கள் அப்பொழுதுராஜாக்களாவார்கள்.

பதினலா மனுவந்தரத்திற்கு அதிபதி பவுமனென்பவனவான். அக்காலத்தில் சுசியென்பவன் இந்திரனயிருப்பான். தேவகணங்கள் சாட்சுஷர், பவித்திரர், கனிஷ்டர், பிராசிதர், வாசாவிருத்தர் என்பவர்களாம். சப்தரிஷிகள் அக்கினிபாகு, சுசி, சுக்கிரன், மாகதன், ஆக்கினீத்திரன், யுக்தன், ததாஜிதன் என்பவர்களே. அம்மனுவுக்கு உரு, கம்பீரபுத்தி முதலான குமாரர்கள் பூமியைக் காத்து வருவார்கள்.

கிருதயுக முதலான நான்கு யுகங்களின் முடிவில் வேதங்களுக்கு அழிவு உண்டாகுமன்றே அப்போது அந்தச் சப்த ரிஷிகள் சொர்க்கத்தினின்றும் பூமிக்குவந்து அவ்வேதங்களை மறுபடியும் வழங்கும்படி செய்வார்கள். கிருதயுகந்தோறும் அந்தந்த மனுக்கள் ஸ்மிருதி யென்கிற தருமசாஸ்திரத்தைச் செய்து வருவார்கள். தேவதைகளோ மனுவந்தர முடியுமளவும் யாகங்களில் ஹவிர்ப்பாகங்களைப் புசித்து வருவாகள். மனுபுத்திரர்களினலும் அவர் குலத்திற் பிறக்குமரசராலும் மனுவந்தரத்தின் கடைசிவரையிலும் பூமியானது ரக்ஷிக்கப்பட்டுவரும். இப்படி மனுவந்தரந்தோறும் அவர்களாலே லோகோபகாரம் நடந்துவருமென்றறியும்.

மனுவும் சப்தரிஷிகளும் தேவதைகளும் இந்திரனும்மனுபுத்திரர்களும் எம்பெருமானுடைய

சங்கல்பகாரியத்தை நிறைவேற்றும்படியான அதிகாரபுருஷர்களென்று நினையும். இவ்விதமாய்ப் பதினான்கு மனுவந்தரங்கள் கழியும்போது ஆயிரம் யுகங்களின் அளவுள்ளதான ஒரு கல்பகாலம் சம்பூரணமாகிறது. இது ஒரு பகற்காலம். இவ்வளவுள்ள இராக்காலமும் கழிந்தபின்பு பிரமசொரூபத்தை அதிஷ்டித்து எழுந்தருளியிருப்பவனும் முதல் சிருஷ்டிகர்த்தாவும் சகல ஐசுவரியமுள்ளவனும் சகல சொரூபியுமான ஸ்ரீ ஜநார்த்தன பகவானானவன் திரிலோகங்களையும் உட்கொண்டு யோகநித்திரையை ஆசிரயித்து உலகமெல்லாமழிந்த மகார்ணவஜலத்திலே ஆதிசேஷனாகிய படுக்கையிலே திருக்கண்வளர்ந்தருளுவன்.

பின்பு பகவான் யோகநித்திரையினின்றும் விழித்தவனாகி ரஜோகுணத்தை யாசிரயித்து முன்போலவே லோகசிருஷ்டியை நடத்துவன். மனுவந்தரந்தோறுமுள்ள மனு தேவ இந்திர சப்தரிஷி மனுபுத்திரர்களெல்லாம் ஸ்திதியைச் செய்யத்தக்க ஸ்ரீவிஷ்ணுவின் சாத்துவிக அம்சமாவார்கள். உலகங்களை நிலைபெறுத்துந் தொழிலுள்ள ஸ்ரீவிஷ்ணு சதுர்யுகங்களிலும் சகலபிராணிகளுக்கும் இதமுண்டாகும்படியாக கிருதயுகத்திலே கபிலாதிசொரூபங்களைத் தரித்தவனாய் உத்தமமான ஞானத்தைப் பிரசாதித் தருளுகிறான். த்ரேதாயுகத்தில் அந்தந்தச்சக்கிரவர்த்திசொரூபமுடையவனாகி துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனங்களைச் செய்துவருகிறான். துவாபரயுகத்திலே வேதவியாசஸ்வரூபனாகி ஒன்றாயிருக்கும் வேதத்தை இருக்கு முதலான நான்கு பிரதான பிரிவுகளாகவும் சாகாபேதங்களாலே அநேகம் பிரிவுகளாகவும் பிரித்து லோகத்தை யனுக்கிரகிக்கிறான். கலியிலேயோ கல்கியவதாரஞ்செய்தருளி வேதசாஸ்திரங்களையும் தருமங்களையுங்கடந்துநடக்கிற துஷ்டர்களை வழியிலே நிறுத்துகிறான். இவ்வாறு எம்பெருமான் அர்தந்தரூபத்தினாலே உலகங்களைச் சிருட்டித்துங் காத்துஞ் சங்கரித்தும் வருகிறான். ஆதலால் சர்வபூதசொரூபியான இவ்வெம்பெருமானைக்காட்டிலும் ஒருவஸ்துவுமில்லை; என்பதற்கு—

స్థలేవిష్ణుర్జలేవిష్ణుః విష్ణుస్థావరజంగమాః ।
అంతర్విష్ణుర్బహిర్విష్ణు స్సర్వంవిష్ణుమయంజగత్ ॥
ఆరాధ్యోభగవాన్ విష్ణు రేకఏవసదాచ్యుతః ।
కేశవాదాత్తంకృత్స్నం జగత్ స్థావరజంగమం ॥

என்கிற சுலோகங்களும் அநுசந்தேயமாகும்.

ஆரியமத சித்தாந்தப் பிரகரணம்.

மும்மூர்த்தி சொரூப மதங்களும், முக்தி மார்க்க பேதங்களும்.

ஆரியர்களே! முதலிலக்கப் பத்திரிகையில் நமது ஆரியமத சித்தாந்தத்தையும், அதன் பிரிவான வைஷ்ணவம், சைவம், அத்வைதம் இம்மதங்களின் கருத்துகளையும் சுருக்கமாகச்சொன்னோமன்றோ? இப்பத்திரிகையில், அம்மதங்களில் நமது ஆராய்ச்சியினாற்றேறிய ஐக்கிய அபிப்பிராயங்களையும், அவற்றின் விரோதங்களையும் வியவகரிப்போமாக.

“பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
  பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே யெனவு நின்ற
  விமையவர்தந்திருவுருவே றெண்ணும்போது
ஒருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ
  யொன்றுமா கடலுருவ மொத்து நின்ற
மூவுருவங் கண்டபோ தொன்றாஞ் சோதி
  முகிலுருவ மெம்மடிக ளுருவந் தானே”

என்கிறபடி, வேதங்களினாலே பிரதிபாதிக்கும் கடவுள் ஒன்றே. அதைத்தான் பிரம்மம் என்பது. அப்பிரம்மமே ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் உலக வியாபாரத்தின் பொருட்டு, பிரமன், விஷ்ணு, சிவன் என்கிற மும்மூர்த்தி சொரூபத்தை யடையும். இவற்றால் ஆக்கல் தொழிலே சிரேட்ட மென்றோர் மதம். காத்தல் தொழிலே மேன்மை யென்றொரு மதம். அழித்தல் தொழிலே அதிகமென்றொரு மதம். இம்மூன்றும் ஒருங்கே யமைந்த பிரம்மமென்றொருமதம். இப்படி இன்னும் அநேக மதங்கள் கூறுபட்டு நிற்கும். நின்றாலும் அவைகள் மும்மூர்த்தி சொரூப மதமே ஆதாரமாகக் கொண்டுவாழும் மதங்களாம்.

பிரம்மம் அருவப்பொருளாகையால், அதன் சக்தியினால் சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரமாகியமுத்தொழிலையும் நடத்த பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கிற மும்மூர்த்தி யுருவத்தை யெடுத்து, அதில்தானே அபிநிவேசித்து உலககாரியங்களை நடத்தும். இவ்விடத்தில் அருவமென்பதிலிருந்து மூர்த்தி யுருவங்கள் எப்படி யுண்டாகுமென்று சிலர் சங்கை கொள்ளுவார்கள். அருவமென்றால், உருவமேயில்லாதது என்கிற கருத்தல்ல. பிரகிருதி சம்பந்தமான வுருவ மெடுத்து அவ்வுருவம் அழியுந்தன்மையுடைத்தா யிராமல்

அஞ்ஞானிகளுக்குப் புலப்படாமல் ஆயிரமாயி
ரமான சிரங்கள், புஜங்கள், கண்கள், செவிகள்
முதலான அவயவ சமுதாயங்கள் கூடி நிறைந்த
அநந்த வுருவமுடையது. எனவே, பஞ்சோபநி
ஷண்மயமான வுருவத்தை யுடையதாம். அந்த
பிரம்மம் கண்ணில்லாமலே பார்க்கும். காதில்
லாமலே கேட்கும். காலில்லாமலே நடக்கும்
என்பன வேதங்கூறுவதால் அது எங்கும் நிறை
ந்த சோதியுருவமாயு மிருக்கும்.

அந்தப் பிரம்மத்திற்கு எல்லா நாமங்களும்
அமைந் துள்ளன. இதனால், வைஷ்ணவர்கள்
நாராயண நாமத்தை முதலாகக்கொண்டு சித்தா
ந்தப் படுத்தினார்கள். சைவர்கள் சிவநாமத்தை
முதலாகக்கொண்டு சித்தாந்தப் படுத்தினார்கள்.
பிரம்ம நாமத்தைக்கொண்டு ஸ்மார்த்தர்கள் சித்
தாந்தப் படுத்தி, விஷ்ணுவையும், சிவனையும்
தழுவிநின்றார்கள். பிறகு இவர்கள் அத்வைத
சித்தாந்தம் என்பதை சங்கராசாரியர்காலமுதல்
உண்டாக்கிக்கொண்டார்கள்.

பிரம்மத்தின் முதலமிசம் விஷ்ணு என்று
ஆதாரத்தைக் கொண்ட வைஷ்ணவர்கள் பிரம
னையும், சிவனையும், புத்திரபௌத்திராதிகளாக
வும், விஷ்ணு அமிசிகளாகவும், சீவர்களாகவுங்
கொள்வார்கள். சிவத்தை பிரம்மத்தின் முதலமி
சமாகக் கொண்ட சைவர்கள், விஷ்ணுவையும்,
பிரமாவையும் சிவாமிசமாகவும், சீவர்களாகவுங்
கொள்ளுவார்கள். இவ்விருமதத்தர்களும் வே
தாகமங்களி லிருந்து சித்தாந்தங் கூறுவார்கள்.
இவ்வாகம சித்தாந்தம் ஒன்றுக்கொன்று விரோ
தமாகவேயிருக்கும். இவ்விருமதத்திலும், வை
ஷ்ணவ சித்தாந்திகள் பரப்பிரம்மமாகிய நாராய
ணன் தன் னநுப்பிரவேசத்தாலே மும்மூர்த்தி
யானாலும், தன்னவதாரமான காத்தற் றொழிற்
குரிய விஷ்ணு ஒன்றென்றே கொள்ளுவார்கள்.
சைவ சித்தாந்திகளிற் சிலர் பரப்பிரம்மமாகிய
சிவம் தன் னநுப்பிரவேசத்தாலே சங்காரத்தொ
ழிற்குரிய சிவமூர்த்தியானாலும் பரமசிவம்வேறு
என்றும், சங்கார சிவன் வேறென்றுஞ் சொல்லு
வார்கள் ; இவ்வாதாரத்தைக் கொண்டு, குண
ருத்திரர், துரியருத்திரர் என்பார்கள். இப்படி
விஷ்ணு, சிவம் சம்பந்தமுள்ள வைஷ்ணவ சை
வர்கட்கே இந்தப்போராட்டமல்லாமல் பிரமனை
யநுசரித்து ஓர் மதமும், வாத போராட்டமும்
இல்லை. முற்கூறியபடி சிருட்டி பலகருவிகளைக்
கொண்டு செய்வதால் அது விசேஷமல்லவென்
றும், அதைக்காத்தலும், அழித்தலும் விசேஷ
மாகையால் இவ்விரண்டே விசேஷமென்றும்,
அதிலும் ஒருபக்ஷத்தார் காத்தலையும், ஒருபக்ஷ
த்தார் சங்கரித்தலையும் உயர்ந்ததாகக்கருதி, அது
பெரிது, இதுபெரிது என்பார்கள். எப்படியா
னாலும் மும்மூர்த்தியும் ஒன்றில்முடிவாகி, அவ்
வொன்றும் பிரம்மமாய் நிற்றலால் இம்மதத்தார்
கள் கொண்ட பரம்பொருள் ஒன்றேயாகும்.

சைவத்தில், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம்,
திரோபவம், அநுக்கிரகம் முதலிய பஞ்சகிருத்
தியங்களை நடாத்த, பரமசிவம் தானே பிரம்மா,
விஷ்ணு, சிவன், மகேசன், சதாசிவன் ஆகப்பிரி
ந்து ஆன்மாக்களுக்கு ஜகத்தை யுண்டாக்கினா
ரென்று கூறும். இது சிவாகம சித்தாந்தமாம்.
வேதத்தில் பஞ்சமூர்த்தங்கள் கூறவில்லை. மும்
மூர்த்தங்களையும் துரியபிரம்மத்தையும் பற்றிக்
கூறும். சைவர்கள் வேதசிவாகம அபிப்பிராய
மிரண்டினையும் ஒன்று சேர்ப்பதால் பரஸ்பர
விரோதமுண்டாகும். சிவாகமப்படி சிவவுரு
வமே மூர்த்தி யுருவங்களாகும். வைஷ்ணவர்
கள் வேதாபிப்பிராயம் ஒன்றையே யனுசரிப்பா
ர்கள். இவர்கட்கு பாஞ்சராத்திராகம மிருப்பி
னும், அவற்றிலும் நாராயணபிரம்ம வுருவமும்,
பிரமவிஷ்ணு ருத்திரமூர்த்தி யுருவங்களுங்கூடி
சதுர்த்தபடியும் பலஅவதாரங்களுங்கூறும். சை
வத்தில் பஞ்ச, சப்த, நவவித மூர்த்தங்கள் கூறு
கின்றது. இவ்விருமதத்திற்குந் தத்துவங்களின்
மாத்திரம் வேறுபாடுண்டாகின்றன.

இவ்வண்ணமே தத்துவசித்தாந்தங்கள் அநே
கமுண்டு. அவற்றில், அத்வைதம், துவைதம்,
விசிஷ்டாத்வைதம் என்னும் மூன்றே ஜீவித்தி
ருக்கின்றன. மற்றவை யழிந்தொழிந்தன. இம்
மூன்றிலும் அநேக கிளைக ளுண்டாய் விட்டன.
மூன்றே ஆரியர்கள் சம்மதமாகக் கொண்டிருக்
கின்றார்கள். இம்மூன்றும் சமரச ஞானமுள்ள
வர்கள் ஒன்றிலொன் றைக்கியப்பட் டிருப்பதி
னால் ஒன்றெனக்கொள்ளுவார்கள். சமரசஞா
னமில்லாத பேதவாதிகள் முரண்பட்டு நிற்பார்
கள். இப்படிப்பட்டவர்களுக்குப் பிறவி யொழி
யாது. அப்படியானால், ஏன் இத்தனை மதங்க
ளுண்டாகவேண்டுமென்று சிலர் ஆக்ஷேபிப்பார்
கள். அவற்றை பக்திவிசேஷத்தை யனுசரித்து
வேதவேதாந்தங்களே கற்பித்தன. அப்படி கற்
பிக்காவிட்டால், சொற்பஞான முள்ளவர்க ளா
கிய ஆன்மாக்கள் தங்கடங்கள் ஞான பரிபக்குவ
த்தினாலறிந்து உய்யும் வழியைக்கண்டு பிடிக்க
மாட்டார்கள். இவற்றை யறிந்தே பரமான்மா
வும் அருவமுருவத்தை யடைந்தது. இத்தியாதி
உண்மைத் தத்துவங்களை ஜீவர்களறிந்தும், பிர
கிருதி, மாயையென்னும் வஸ்துவின் வழிப்பட்டு
பேதபுத்தியை யடைகின்றார்கள். மாயை வசப்

படாது, அபேதத்தை யனுசரிப்பதினலேயே மோக்ஷமுண்டாகும்.

வேதவேதாந்தங்களில் பிரம்மமே யாவுமாயின என்பதால், அத்வைதிகள் பிரம்மமே(ஆன்மாக்கள்) நாம் என்பார்கள். இப்படிக்கூறுவது வேதாந்தங்களிலே விதிக்கும் ஆன்மாபரமான்மா விலக்ஷணங்களுக்கு விரோதமாம். இவ்வண்ணம் பூர்வேர்த்தர விரோதங் கூடாவெனவே, விசிஷ்டாத்வைதிகள் சருவஞ்ஞனுகிய பரமான்மாவுக்கும், கிஞ்சிஞ்ஞனுகிய சீவான்மாவுக்கும் பேதமுடைத்தா யிருப்பதாலும், பரமான்மா மாயை வசப்படாதவனென்றும், சீவான்மா மாயைவசப்படுபவனென்றும் விதித்திருப்பதாலும், ஆன்மா வேறு, பரமான்மா வேறு என்பார்கள். அப்படி வேருனலும் பரமான்மாசொரூபத்தை சீவான்மா வடைந்து ஒன்ருகப் பொருந்திவாழும் என்பார்கள். துவைதிகள் ஆன்மா பரமான்மா வெவ்வேறென்றும், அவை ஒன்றினிலொன்று பொருந்தாது வாழும் என்பார்கள். இப்படி முச்சித்தாந்திகளும் முரண்பட்டு நின்ருலும் ஆஸ்திகத்திற்கு=கடவுள் ஒன்றுண்டென்பதிற்கு மாத்திரம் குறைவின்மை தெற்றெனப் புலப்படும்

பிரம்மமே எல்லாச்சொரூபங்களானுலும், அவற்றை நடத்துவதற்குத் தான் அந்தரியாமியாய் நின்ருலல்லது ஒன்றும் நடவாது. "அவனன்றி ஓரணுவு மசையாது" என்னும் பழமொழியையுமுணர்க. யாவுந்தானுயும், அவற்றைநடத்துவதுந் தானேயாகுங்கால், சொரூபத்தையடைந்தவனுகிருன். பிரம்மம் அரூபவஸ்துவா யிருந்தும், அது ரூபவஸ்துவாதல் வியவஸ்தையாம் என்று சிலர் கூறுவார்கள். அரூபவஸ்துவின் சக்தியே ரூபவஸ்துக்களாகின்றமையால் வியவஸ்தா தோஷம் உண்டாக மாட்டாது. அரூபத்திற்கு ரூபங்கற்பிப்பது மாயையென்று அத்வைதபக்ஷம். ரூபமாகிய சக்தியை யாசிரயித்திருப்பதே அரூபத்தின்லக்ஷணம். ஆசிரயித்ததைவிட்டு அதனேடு கலந்திருத்தலே ரூபலக்ஷணம். இக்காரணம் பற்றியே "யஸ்யாத்மா ஶரீரம்" "யஸ்யப்ருதிவிஶரீரம்" என்று வேதங்கூறும். ஆகையால் எக்காலத்தும் பிருதிவியையும், ஆன்மாவையும் சரீரங்களாகக் கொண்டிருக்கும் பிரம்மம். இவ்வாதரங்களினலேயே பிரம்மம் ரூபம்=சரீரத்தை யடைந் துள்ளது என்பதுண்டு.

பரமான்மாவின் ஆநந்தத்தை சீவான்மா அடைதலே ஆநந்தமாம். ஓர்வஸ்து, மற்றொரு வஸ்துவின் ஆநந்தத்தை யடைதலே ஆநந்தமாகும். அவ்வஸ்துவில் கலர்துவிடுதலே ஆநந்தமென்பது ஆநந்தாநுபவத்திற் கழகல்ல. பிரம்மமே ஆநந்தசொரூபமாதலால், அது மாயைவசப்பட்டு, ஆநந்தங்கெட்டு அம்மாயையை நீக்கி மீண்டும் ஆநந்தத்தையடையவேண்டுமென்பது என்ன இரகசாரம். இப்படி அத்வைதிகள் பக்ஷமாகக்கொண்டாலும், பரமான்மா மாயை வசப்படுகிறதென்று ஆநந்தத்திற்குத் தோஷம் கற்பிப்பது கூடாது. ஆநந்தமானது இரண்டு வஸ்துவினுல் விளங்குமேயல்லாமல், ஓரேவஸ்துவினுல் விளங்காது. இவைகளால் ஆண்டானடிமைகளாக விருந்து எக்காலத்தும் ஆநந்தமடைதலே மேன்மையென விளங்கும்.

அத்வைத மதத்தில், பக்தியின்றி பிரமத்தை யறியமுடியாதென்று சிலரும், பக்தியில்லாமலே பிரமாநுபவத்தால் முக்தியுண்டாகுமென்று சிலரும் அபிப்பிராயங்கொள்ளுவார்கள். பக்தி விசிஷ்டாத்வைதிகளுக்கு முற்றுமுடையது. அத்வைதிகளுக்கு பிரம்மஞானம் உண்டாகிற மட்டுமே. இவர்கள பக்தி மும்மூர்த்திகள்முதல் யாவனையும் குருமூர்த்தமாகக் கொண்டு முடிப்பார்கள். பக்தியின்றி பரனையடைவது கஷ்டம் தான். மாயாபிரபஞ்சத்தில், ஓர்காலத்தில் பக்தியையும், ஓர்காலத்தில் முக்தியையும் அத்வைதிகள் அடையப்பார்ப்பதும், சுவாநுபவம் கைகூடும் என்று எண்ணுவதும் வீணேயாகும்.

இவ்வண்ணம் வேதமும், புராணங்களும் பாகுபாடுசெய்தது பிரம்மத்தை யடையும் பக்தியின்பொருட்டே யல்லாமல் வேறல்ல. ஆன்மாக்கள் ஒவ்வொரு காரியத்தையே சொற்பஞானத்தால் மேலாகக் கொள்ளுவது சுபாவமாகையால், பிரம்மமும் பக்தியுண்டாகும் பொருட்டு அவ்வம்மூர்த்தி சொரூபங்கொண்டு பிரசாதித்தருளினதென்க. ஒவ்வொரு மதத்திலும், பிரம்மசொரூபமே மூர்த்திசொரூபங்களை யடைகின்றது என்பதால் அம்மூவருடைய மோக்ஷஸ்தானமும் ஒன்றேயாகும். இவற்றை ஆன்மாக்கள் மனக்குறும்பை யறுத்து முற்றும்நோக்கினல் நன்கு விளங்கும். மும்மூர்த்திகளுடைய சொரூபநாமகுண சேஷ்டிதங்கள் ஒவ்வோரவசரம்பற்றி பலவாறு கொண் டிருக்கின்றமையாலும், அவைகளும் புராணங்களில் கற்பபேதங்களிலென்று கழிக்கப்பட்டிருக்கின்றமையாலும், அவைகட்கு வேதங்கூறும் ஆதாரங்களைக் கொண்டு தேர்ச்சியடைவதே நலமாம். தேர்ச்சியடையாத மலபந்த முடைவர்கள் குழறுபாடுகளுக்கு செவிகொடுக்காம லிருப்பதே ஆரியர்களுக் கழகு.

"வைஷ்ணவ மதத்தைப்பற்றிய சில ஆசங்கைகள்.

1. நாராயணன் அல்லது விஷ்ணுவுக்குப் பிரகிருதி பேதமா? அபேதமா?

2. உலகத்தோற்றம் விஷ்ணுவினிடத்திலா? பிரகிருதியினிடத்திலா?

3. பிரகிருதி யென்பது தொழிலா? பண்பா? பொருளா?

4. நாராயணன் சுசாதி விசாதி சுவகதபேதம் உற்றவரா? அற்றவரா?

5. நாராயணன் அகண்டராயின் உலகு, உயிர் உண்டென்று ஏற்றுக்கொள்ளப்படுமா?

6. கண்டராயிருந்தாலன்றோ உலகு, உயிர் உண்டென்று ஏற்றுக்கொள்ளப்படும்.

7. கண்டப்பொருளைக் கடவுளென்று சொல்லப்படுமா?

8. நாராயணன் அல்லது விஷ்ணு முதலிய பல திருநாமங்கள் யதார்த்தமா? கற்பனையா?

9. நிர்விகாரமான விஷ்ணு அவதாரஞ்செய்தும், உலகைப்படைத்தும் விகாரப்படுவானேன்.

10. ஒருபொருள் புடைபெயர்தல் தானில்லாத இடத்திலன்றோ, அதுபோல் நாராயணன் புடைபெயருவாராயின் தானில்லாத இடத்திலன்றோ புடைபெயரவேண்டும். தானில்லாத இடத்தில் புடைபெயரும் விஷ்ணு பூரணரென்று சொல்லப்படுமோ?

11. நாராயணன் உலகத்திற்கு முதற்காரணரா? துணைக்காரணரா? நிமித்தகாரணரா?

12. நாராயணன் ஷை மூன்றுகாரணராயிருக்கிறாரென்று சிலந்திப்பூச்சி திருஷ்டாந்தஞ் சொல்லின், சிலந்திப்பூச்சி தானில்லாத இடத்தில் தனது காரியமாகிய நூலை விடுவதுபோல் விஷ்ணுவும் தானில்லா இடத்திலன்றோ, தனது காரியமாகிய உலகை விடவேண்டும். இத்திருஷ்டாந்தம் கூறுவதால் நாராயணனுக்குப் பரிபூரண தோஷம் உண்டாகின்றதே, ஆதலால் ஷை மூன்றுகாரணங்களில் மண்ணாகிய முதற்காரணந் தனது காரியமாகிய கடத்தோடு ஒற்றுமையா யிருப்பதுபோல, நாராயணனாகிய முதற்காரணம் தனதுகாரியமாகிய உலகத்தோடு ஒற்றுமையாயிருக்கின்றதா?

13. கடம் நிகழ்வதற்குத் தண்ட சக்கரமாகிய துணைக்காரணமும், குலாலனாகிய நிமித்தகாரணமும் வேற்றுமையா யிருப்பதுபோல, விஷ்ணுவாகிய துணைக்காரணமும் நிமித்தகாரணமும் வேற்றுமையாயிருக்கின்றதா? ஷை மூன்றுகாரணத்தில் எதைச்சொல்லலாம்?

14. தேகத்தினிடத்தில் தேகியாகிய சீவன் இருப்பதுபோல, உலகமாகிய தேகத்தினிடத்தில் விஷ்ணு தேகியாயிருப்பதினால் தேக தேகி பாவமாக பூரணரா யிருக்கிறாரெனின், தேகத்தினிடத்தில் சீவன் அணுத்தன்மைப்பட்டு ஏகதேசமா யிருப்பதுபோல, உலகமாகிய தேகத்தில் விஷ்ணுவும் ஏகதேசமா யிருக்கவேண்டுமாதலால், இத்திருட்டாந்தத்தினாலும் பரிபூரண சித்தி நிலைபெறா தன்றோ?

15. விஷ்ணு, மனம் வாக்கு காயத்திற்கு கோசரரா? அகோசரரா?

16. வேதம் விஷ்ணுவால் அருளப்பட்டு ஆதியா? அல்லது அனாதியாயுள்ளதா?

17. விஷ்ணுவால் சொல்லப்பட்டதெனின் இருந்த வேதத்தைச் சொன்னாரா? இல்லாமலிருந்து சொன்னாரா? இல்லாமலிருந்தேசொன்னாரெனின் இல்லது வாராது, உள்ளது போகாது, என்னுந் தருக்கப்படி இல்லாத வேதத்தை எப்படி சொன்னார்.

18. சூனியத்திலிருந்து உலகைப்படைத்தார் தேவன் என்று கிறிஸ்துவர் கூறுவதற்கு எவ்வளவு மறுப்புகளுளவாகின்றனவோ? அவ்வளவு மறுப்பும் இல்லாமலிருந்த வேதத்தைச் சொன்னாரென்பதற்கு முண்டாகுமன்றோ?

19. சீவர்கள் முக்குற்றம் நீங்கி முத்தியுறுங் காலத்து சிவத்துவ முற்றிருப்பார்களா? அற்றிருப்பார்களா?

20. சீவர்கள், விஷ்ணுவைப்போல அனாதி நித்தியப்பொருளா? அனாதிநித்தியத்தோற்றமா?

21. முத்தி என்பது முக்குற்றம் நீங்கின இடமா? வைகுண்டத்தானமா?

22. விஷ்ணு திரிகுணமுற்றவரா? அற்றவரா?

23. குணமுற்றவனைக் கடவுளெனப்படுமா? குணமற்றவனைக் கடவுளெனப்படுமோ?

24. கடவுள் குணாதீதரென்று சாஸ்திரங்கள் முறையிட அதற்கு விரோதமாக சாத்துவிதகுணமுடையவர் விஷ்ணு என்று கூறுதல் தவறுடைத்தன்றோ?

இவ்விஷயங்களுக்குத் தக்க சமாதானம் தூஷணையின்றியும், சுருதி யுக்தி யனுபவத்திற்கு விரோதமில்லாமலும், வைணவ சிரோன்மணிகள் எழுதுவார்களென்று நம்புகிறேன்.

விடை விரும்பி."

இந்த ஆசங்கைகள் 6-5-93உ மஹா விகடதூதனில் வெளியாயின. இவைகளுக்கு யாரும் விடையளிக்காததினால், தங்கள் பத்திரிகைக்கு அனுப்பினேன்.

ஓர் வேதாந்தி.

ஆரியமததூஷணபரிகாரப் பிரகரணம்.

ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும், (ஓர் பிரசங்கமும்,)

(கஉ-ம் பக்கத்தொடர்.)

II

(ii) நூல்வழக்கு.

1. சர்மா, "உயர்ந்த நூல்களிற்காணும் பல பெயர்களை உற்றுநோக்கினும், சிவத்தின்பெயரே விண்டுவின் பெயரைவிடப் பெருமையுள்ளதாயிருக்கிறது" என்றார். இதைப்பற்றி நாமும் விசாரித்து விடுவோமாக.

2. உயர்ந்த நூலாகிய வேதவேதாந்தங்களிலொன்றான,—

தைத்திரீயோபநிஷத்தில்,

అంభస్యపారే భువనస్యమధ్యే ।
నాకస్యపృష్ఠే మహతోమహీయాన్ ।
శుక్రేణజ్యోతీంషి సమనుప్రవిష్టః ।
ప్రజాపతిశ్చరతిగర్భేఅంతః ॥

పశూంశ్చ మహ్యమావహ జీవసంచ దిశోదశ ।
మా సోహింసీ జ్జాతవేదోగా మశ్వం పురుషం జగత్ ।
అబిభ్రదగ్న ఆగహి శ్రియామా పరిపాతయ ।
పురుషస్య విద్మ సహస్రాక్షస్య మహాదేవస్య ధీమహి ।
తన్నోరుద్రః ప్రచోదయాత్ ।
తత్పురుషాయ విద్మహే మహాదేవాయ ధీమహి ।
తన్నోరుద్రః ప్రచోదయాత్ ।
తత్పురుషాయ విద్మహే వక్రతుండాయ ధీమహి ।
తన్నోదంతిః ప్రచోదయాత్ ।
తత్పురుషాయ విద్మహే సువర్ణపక్షాయ ధీమహి ।
తన్నోగరుడః ప్రచోదయాత్ ।
కాత్యాయనాయ విద్మహే కన్యకుమారీ ధీమహి ।
తన్నోదుర్గిః ప్రచోదయాత్ ।
నారాయణాయ విద్మహే వాసుదేవాయ ధీమహి ।
తన్నోవిష్ణుః ప్రచోదయాత్ ।
సహస్ర పరమాదేవీ శతమూలా శతాంకురా ।
సర్వంహరతు మేపాపం దూర్వాదు స్వప్ననాశినీ ।
అశ్వక్రాంతే రథక్రాంతే విష్ణుక్రాంతే వసుంధరా ।
శిరసాధారితా దేవీ రక్షస్వమాం పదేపదే ।
ఉద్ధృతాసి వరాహేణ కృష్ణేన శతబాహునా ॥
యోదేవానాం ప్రథమం పురస్తాద్విశ్వాధికోరుద్రోమహర్షిః ।
హిరణ్యగర్భం పశ్యతి జాయమానం సనోదేవ శ్శుభయా స్మృత్యాసంయునక్తు । యస్మాత్పరం నాపరమస్తికించిద్యస్మాన్నాణీయోనజ్యాయోస్తికశ్చిత్ । వృక్షఇవస్తబ్ధోదివితిష్ఠత్యేకస్తేనేదంపూర్ణం పురుషేణసర్వం॥
యద్వేదాదౌ స్వరః ప్రోక్తో వేదాంతేచ ప్రతిష్ఠితః ।
తస్య ప్రకృతి లీనస్య యఃపరస్స మహేశ్వరః ॥
సహస్రశీర్షం దేవం విశ్వాక్షం విశ్వ శంభువం ।
విశ్వన్నారాయణం దేవ మక్షరం పరమం ప్రభుం ।
విశ్వతః పరమం నిత్యం విశ్వన్నారాయణం హరిం ।
విశ్వమే వేదం పురుషస్తద్విశ్వ ముపజీవతి ।
పతిం విశ్వస్యాత్మేశ్వరం శాశ్వతం శివ మచ్యుతం ।
నారాయణం మహాజ్ఞేయం విశ్వాత్మానం పరాయణం ।
నారాయణ పరబ్రహ్మ తత్వం నారాయణః పరః ।
నారాయణ పరోజ్యోతి రాత్మా నారాయణః పరః ।
యచ్చకించి జ్జగత్యస్మిన్ దృశ్యతే శ్రూయతేపివా ।
అన్తర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణ స్థితః ॥
నీలతోయద మధ్యస్థా విద్యుల్లేఖే వభాస్వరా ।
నీవారశూక వత్తన్వీ పీతాభాస్వా త్యణూపమా ।
తస్యాశ్శిఖాయా మధ్యే పరమాత్మా వ్యవస్థితః ।
సబ్రహ్మ సశివ స్సేంద్ర స్సోక్షరః పరమస్స్వరాట్ ॥
ఋతమ్సత్యం పరబ్రహ్మ పురుషం కృష్ణపింగళం ।
ఊర్ధ్వరేతం విరూపాక్షం విశ్వరూపాయవైనమః ॥

என்னும் பிரபல பலிஷ்ட பிரமாணங்களால் சுதரிசனபிரான், உருத்திரன், விநாயகன், கருடன், துர்க்கைமுதலிய அநேகர் பரத்துவசொரூபங்களை யடைந்து, அவரவர் நாமங்கள் வேதாந்தங்களில் ஓதியிருந்தாலும், இவர்களெல்லாம் அப்பிரம்மத்துச் சரீரபூதங்களே. பிர்ம்மமயனாகிய நாராயணனே அவர்களுக்குச் சரீரியாகக் கொள்ளவேண்டுமென்பது வேதசம்மதம். உருத்திரனாகிய சிவனும் திவ்விய ஞான ரூபத்தை யடைந்த மஹருஷியென்று வேதங் கூறியது. இவ்வாதாரங்கள் கொண்டே கணாதிபம், சாத்தேயம், சைவமுதலிய மதங்களுண்டாயின, நாராயணன் பரஞ்சோதிசொரூபமும், உள்ளும் புறம்பும் வியாபித்து விஷ்ணுரூபத்தையு மடைந்தவனும். இவனுக்குத் தேவியாயிருப்பவள் இரக்ஷகரூபியும், சகலபாவங்களையும் போக்கப்பட்டவளுமாகிய ஸ்ரீலக்ஷ்மீ என்றுகொள்க. இவ்வியவகாரங்களை யாம் காட்டிய கௌரப் பிரமாணங்களில் பூர்வோத்தரவிருத்தமில்லாமல் ஆராய்ந்து கண்டுகொள்க. இவ்வபிப்பிராயங்களையே, ருக்கு, யஜுஸ், சாமம் என்னும் மூன்று வேதசாரமயமாகிய,—

புருஷஸூக்தத்தில்,

సహస్ర శీర్షా పురుషః । సహస్రాక్షః సహస్రపాత్ ।
స భూమిం విశ్వతో వృత్వా । అత్యతిష్ఠద్దశాంగులమ్ ।

என்கிறபடி, "ஆயிரஞ்சிரசுகளும், ஆயிரங்கண்களும், ஆயிரம் பாதங்களும் உடைய விராட்டு என்னும் புருஷன் பிரம்மாண்டகோளமானபூமியை ஆவரித்து, பத்தங்குலமுடைய தேகத்தை அதிஷ்டித்திருக்கின்றான்" என்று, அப்புருஷோத்தமனாகிய நாராயணபரப்பிரம்மத்தின் மகிமைகளைக்கூறி, அந்தத்தில்,—

యో దేవేభ్య ఆతపతి । యో దేవానాం పురోహితః ।
పూర్వో యో దేవేభ్యో జాతః । నమో రుచాయ బ్రాహ్మయే ।
రుచం బ్రాహ్మం జనయన్తః । దేవా అగ్రే తదబ్రువన్ ।
యస్త్వైవం బ్రాహ్మణో విద్యాత్ । తస్య దేవా అసన్వశే ।
హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ । అహోరాత్రే పార్శ్వే ।
నక్షత్రాణి రూపం । అశ్వినౌ వ్యాత్తం ।
ఇష్టం మనిషాణ । అముం మనిషాణ । సర్వం మనిషాణ ।

என்றுகூறி, அதில், "எவன் தேவர்களின் பொருட்டு, எங்கும் பிரகாசிக்கின்றானோ, எவன் தேவர்களுக்குப் புரோகிதனாயிருக்கின்றானோ, எவன் தேவர்களுக்கெல்லாம் முதன்மையாய்ப் பிறந்தானோ, அப்படிப்பட்ட ஸ்வயம்பிரகாசமான பிரம்மத்துக்கு நமஸ்காரம். சமஸ்ததேவதைகளும், சிருஷ்டிகாலத்தில் பிரம்மசம்பந்தமான சேதனங்களாய்ப் பிறந்து, அந்த பிரம்ம தத்துவத்தைக்குறித்து, இவ்வண்ணம் கூறினார்கள். ஏ! பரமாத்துமா! எந்தபிராம்மணன் ஆதியந்தமான நிலைமையை அறிகின்றானோ, அந்தபிரம்மவித்துக்கு, ஸமஸ்ததேவர்களும் சுவாதீனமாகின்றார்கள். ஏ! பரமபுருஷா! பொறுமையுங் கருணையுமாகிய பூ, லக்ஷ்மீ என்கிற தேவதைகள் உமக்குப் பத்தினிகளாக விருக்கின்றார்கள். இரவும் பகலுமே உமக்குப்பக்கங்கள். நக்ஷத்திரங்களே உமது ரூபம். அசுவனி தேவர்களே உமக்குப் பிரகாசமான முகம். எங்களிஷ்டத்தைப் பூர்த்திசெய்யும். இகபர லோகத்தில் வாழச்செய்யும். சர்வசம்பத்தையுங் கொடும்" எனப் புகழப்பட்டது.

இவற்றால், விஷ்ணுவாகிய நாராயணனைத்தவிர வேறொருதேவர்களுக்கும், நாராயணனென்ற பெயரில்லாதிருப்பது ஸ்பஷ்டமாய் விளங்கிக்கொண்டிருக்க, முழுப்பூசுணைக்காயை ஒரு கவளச் சோற்றிலிட்டு மறைக்கத் தேடின, அப்பைய தீக்ஷிதர் அபராவதாரமான சர்மாவின் சாமர்த்தியமே சாமர்த்தியம்.

(ர) "நாராயணன் என்பது ஜலத்தின்மேல் ஊர்பவன் என்று பொருள்" எனவும், "ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஜலத்தில் மிதந்துகொண்டு தூங்குவதால், தூங்குமூஞ்சியெனவும், ஸ்ரீசிவபெருமானுக்கு ஜனங்களுடைய இருதய கமலங்களில் வசிப்பவன்" ஆதலால் கருணாமூர்த்தியாகிய நாராயணன் என்கிற பெயர் உரிய தென்பதைப் பின்னால் வேதப்பிரமாணங்களால் நிரூபிக்கப்போகிறோம்" எனவும் கூறுகின்றார். இவர் கீழே ஒப்புக்கொள்ளுகிறபடி, ஸ்ரீவிஷ்ணு என்கிற பதார்த்தத்துக்கு "எங்கும்வியாபித்தவன்" என்றபோதே, அப்பெருமானுடைய பரிபூரணத்துவத்தை விசதமாய் விளக்குகின்றது. இவ்வொருபெயரே நரரிடத்திலும், ஜலத்திலும் மற்றுமெங்கும் வியாபித்திருக்குமவர் என்கிற பொருள்தரும். நாராயணன் என்கிற நாமம், விஷ்ணு என்கிற பெயருள்ளடங்கியேயிருக்கிறதென்பது மேலே காட்டிய பிரமாணங்களினால் பண்டித பாமரர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுவர். நாராயணன் ஜலத்திலும, நாரங்களிடத்திலும் "தத் விஷ்ணோ பரமம்பதம் ஸதாபஶ்யந்தி ஸூரயஃ" என்கிறபடி, நித்தியசூரிகளுக்காக வைகுந்தத்திலும், எழுந்தருளியிருப்பவனைத் தூங்கிமூஞ்சியென்பது தூஷணவாக்கியமாகையால், நாமும் உருத்திரனாகிய சிவனை "ரோதயதீதிருத்ரஃ" என்கிறபடி அழுமூஞ்சியென்று சொல்ல நேரிடும். இப்படி அடிக்கடி அவர் தூஷணைக்கெல்லாம் நாமு மெடுத்துக்காட்டுவது பிரயோசனமின்மையால், அவற்றைவிட்டு நாராயணன் என்கிறபதார்த்தத்திற் குரிய பிரமாணங்களை மாத்திரம் சிறிது யோசிப்பாம்.

(ர-1.) "நிவாஹா நாராணாம் நித்யாநா மயநமிதி நாராயணஃ" எனவும், "நாராணா மயநம் ப்ராப்ய ப்ராபகமாதாரச்ச நாராயண" எனவும் "நாரா அயனம் யஸ்ய நாராயணஃ" எனவுங்கூறியவைகளில், நாரங்களாகும் நித்தியவஸ்துக்களின் சமூகங்களுடைய பிராப்பிய பிராபக ஆதாரங்களானவன் நாராயணன் என்றும், "ஜாகரிதோ ப்ரஹ்ம ஸ்வப்நே விஷ்ணு ஸ்ஸுஷுப்தௌ ருத்ர ஸ்துரீயம் க்ஷரம்" என்றும், "திருமால் நான்முகன் செஞ்சடையா னென்றிவர்களெம் - பெருமான் றன்மையை யாரறிகிற்பார் பேசியென் - ஒருமாமுதல்வா வூழிப்பிரானென்னை யாளுடைக் - கருமாமேனிய னென்பன் என் காதல் கலக்கவே" என்கிற தமிழ்வேதத்திலும், கூறியிருக்கின்றமையால், பிரம்ம, விஷ்ணு ருத்திரேந்திராதிகளுக்கும் மேலான பொருளாகிய நாராயண பரபிரம்மம் ஸர்வான்மாக்களிலும்

அந்தரியாமியாய் எழுந்தருளி இரக்ஷிக்கின்ற கருணாமூர்த்தி ஸ்வரூபமென்றும் தெள்ளிதிற் புலப்படும்.

(*a*-2.) தைத்திரீயத்தில், விஷ்ணுவே நாராயணனென்று அவன் மகிமைகளைக்கூறி, "ஶாஶ்விதம் ஶிவமச்யுதம்" எனக் கோஷிப்பதால், நாராயணனே மங்கள ஸ்வரூபியாகிய சிவம் எனக் கொள்க. அந்நாராயணனுக்கு கருணாசக்தியாகிய ஸ்ரீலக்ஷ்மிபத்தினியா யிருக்கின்றாளென்று கூறியிருக்கின்றது. இந்தப் பரமபுருஷனைக் குறித்து புருஷஸூக்தமும், ஸ்ரீபிராட்டியைக் குறித்து ஸ்ரீஸூக்தமுங் கூறுகின்றது. ஸ்ரீலக்ஷ்மீ சமேதனான நாராயணனை சிவன் என்பது வேதவிருத்தமேயாம்.

(*b*) "விஷ்ணுமூர்த்தியை கோவிந்தன் என்பதால் பசுமாடுகள் மேய்ப்பவனென்றும், பூமியை அடைபவன் என்றும், சிவபெருமானுக்கோ பசுபதியென்கிற பெயராகையால், பசு=ஆன்மாக்களுக்கு பதியென்றும்" ஏற்றத்தாழ்ச்சியும், ஒரு புராணவுரையுங்காட்டினார். இது எந்தத்தாமசபுராண வாக்கியமோ? அன்றியும், "ஏதாவந்தோவை பஶவோ த்விபாதஶ் சதுஷ்பாதஶ்ச அஹமேவ பஶூநாமதிபதி꞉" என்பதை வேதவாக்கியமென்று ஒன்று கூறி அதற்கு விரோதமானவுரையை விளக்கியிருக்கிறார்.

(*b*-1.) "ஆஹார நித்ரா பய மைதுநாநாம், ஸமாந மேதத் பஶுபிர் நராணாம், ஜ்ஞாந விஶேஷோ ஹ்யதிகம் நராணாம், ஜ்ஞாநேந ஹீநப் பஶுபிஸ் ஸமாந꞉" என்கிற வாக்கியப்படி, ஆகாரமும், நித்திரையும், பயமும், மைதுனமும் ஆகிய நான்கும் பசுக்களாகிய மிருகக்கூட்டங்களுக்கும், நரர்களாகிய ஆத்மாக்களுக்கும் சமானமாக இருக்கின்றன. அவற்றைக்காட்டிலும் ஞானம்=பகுத்தறிவு ஒன்று ஆத்மாக்களுக்கு அதிகமாக இருக்கின்றது. அந்த ஞானமில்லாதவன் பசுக்களுக்குச்சமானனாவான். இப்படியிருக்க, ஆத்மாக்களைப் பசுவென்று சொல்வது மோஹனசாஸ்திரக் கற்பனையாயிருக்கும். பாசத்தால் கட்டுண்டவர்களாகையால், பசுவெனப் பொருள் கூறுவதென்றால், அப்பாசம் என்றும் விடாமலிருக்க வேண்டும். ஞானோதயத்தால் அப்பாசம் அறுந்துவிடுமாகையால், பொதுவாகப் பசுவெனல் கூடாது. பாசத்திற் கட்டுண்ட அஞ்ஞானதிசையில் பசுவென்று கூறின் ஒருவாறமையும். சித்ரூபமாகிய ஆத்மாவைப் பசுவென்பது அடாது. வேதங்களில் பசுவென்று சிலவிடங்களில் சொல்லியிருக்கிறதென்றால், அது யாகங்களுக்குரிய நாற்கால் பசுவையும், நரமேதத்துக்குரிய இரண்டுகாற் பசுவையுங் கூறியதென்க.

(*b*-2.) சிவனைப் பசுபதியென்பது எருதுவாகனன் என்றே ரூடியான நாமமாம். ஆகமங்களில் பசுவென்று ஆத்மாவைக் கூறியிருக்கின்றதேயெனின், அதுவிரோதமென்று "பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்" என்று வியாசரும், சிவனுங் கற்பிக்கப்பட்ட "பஶுபதி மத மநாதரணீயம்" என்று பாஷியகர்த்தாக்களுங் கண்டித்து ஒதுக்கிவிட்டார்கள். பசு, பதி என்கிற பதங்களை ஆத்மாவுக்கும், சிவனுக்கும்பொருள்கூறின், கோவிந்தன் என்பது விதிசிவேந்திராதி முதலிய ஆன்மாக்களை மேய்ப்பவன் என்று பொருளாகும். "கோ விழி பசு நீர் திக்குக் குலிசம் விண் கிரணம் பூமி, யேவுனை சுவர்க்கம் வேந்தனிரங்கல் வெற்பீரேழாமே" என்றும் "ஸ்வர்கேஷு பஶுவாக் வஜ்ரு திக் நேத்ரு க்ருணி பூ ஜலே" என்றும் நிகண்டுகளில் "கோ" என்பதற்கு பல பொருள்களுள. விஷ்ணுவுக்குரிய கோவிந்தன் என்னும் பெயருக்கு, உலகத்தை உத்தாரணஞ்செய்தவன், இந்திராதிகளைக் காப்பாற்றினவன், என்னும் பெயர்களே ரூடியாம். வேத நிகண்டாதிகளில் "கோ" என்பதற்கு "ஆத்மா" வென்னும் பொருளைக் காண்க.

(*b*-3.) அன்றியும் விஷ்ணுவுக்கு கோவிந்தன் என்ற பெயர்க்கு,—

மோக்ஷதர்மத்தில்,

నష్టాంవై ధరణీం పూర్వ మవిందం యద్గుహాగతామ్ ।
గోవింద ఇతితే నాహం దేవైర్వాగ్భిరభిష్టుత ॥

ஹரிவம்சத்தில்,

అహంకిలేంద్రో దేవానాం త్వం గవా మింద్రతాం గతః ।
గోవింద ఇతి దేవాస్త్వాం స్తోష్యంతి భువి శాశ్వతం ॥

గౌరేషా భూస్తథావాణీ తాంచ విందయతే భవాన్ ।
గోవిందస్తు తతో దేవ మునిభిః కథ్యతే భవాన్ ॥

என்பவற்றில் ஆராய்ந்தறிக. மாடுமேய்ப்பவனென்பது பொறாமையாற் சொன்னதாம். மற்றும் விசேஷார்த்தங்களை கீதாபாஷ்யத்திலும், மாதவீயம் முதலிய நூல்களிலும் கோபாலதாபநியுபநிஷத்திலுங் காண்க. பத்திரிகை இடந்தராதென்கிற பீதியால் எண்ணிறந்த கோடவில்லை.

(இன்னும் வரும்.)

தி. பரவஸ்து சேஷாத்திரி அய்யங்கார்,

பல்லாரி.

பொதுப்பிரகரணம்.

பெண்கள் புகழும், இகழும்.

உத்தமப் பெண்களைப்பற்றி இந்து சாஸ்திரங்கள் விசேடமாய்ப் புகழ்ந்தன. அவர்களில்லாத வீடு காடு என்றே எண்ணவேண்டும்.

"பெற்ருர்ப் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் - புத்தேளிர் வாழு முலகு"

என்று, பெண்கள் கணவனை வணங்கப்பெற்ருல், தேவரால் சுவர்க்கத்தில் வணங்கப்படும் பெருஞ்சிறப்படைவர். ஆகையால் அப்பெண்கள் கணவர்களுக்கு,—

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்-வன்னமுலை
வேசிதுயிலும் விரல்மந்திரி மதியும்
பேசி லிவை யுடையாள் பெண்."

என்று, அன்பில் தாயைப்போலவும், பணிவிடை செய்வதில் அடியாளைப்போலவும், அழகில் இலக்குமியைப் போலவும், பொறுமையில் பூமிதேவியைப்போலவும், சயனத்தில் வேசிகளைப்போலவும், புத்திகூறுவதில் மந்திரிகளைப்போலவும் சொல்லத்தகுந்தவர்களே பெண்டீராகின்ருர்கள்.

அவர்கள்,—

పితృభిర్భ్రాతృభిశ్చైతాః పతిభిర్దేవరైస్తథా ।
పూజ్యా భూషయితవ్యాశ్చ బహుకల్యాణ మీప్సుభిః ॥

தந்தைகளாலும், சகோதரர்களாலும், கணவராலும், மாமன் மைத்துனன்மார்களாலும் பூசிக்கவும், பூஷிக்கவுந்தகுந்தவர்களாயிருக்கின்ருர்கள்.

యత్ర నార్యస్తు పూజ్యంతే రమంతే తత్ర దేవతాః ।
యత్రైతాస్తు నపూజ్యంతే సర్వాస్తత్రాఫలాః క్రియాః ॥

எவ்விடத்தில் பெண்கள் பூஜிக்கப்படுகின்ருர்களோ, அவ்விடத்தில் தேவதைகள் திருப்தியடைகின்ருர்கள்; பூஜிக்கப்படாத இடத்தில், எவ்வித நற்கருமங்கள் செய்தாலும் பலனில்லாமற் போய்விடும்.

శోచంతి జామయో యత్ర వినశ్యత్యాశు తత్కులం ।
న శోచంతితు యత్రైతా వర్ధతే తద్ధిసర్వదా ॥

மருமக்கண்மார் எந்த வமிசத்தில் துக்கத்தையடைகின்ருர்களோ, அவ்வமிசம் சீக்கிரம் நாசமடையும். துக்கமடையச் செய்யாத வமிசம் அபிவிர்த்தியாய்க் கொண்டிருக்கும்.

తస్మాదేతా స్సమభ్యర్చ్యా భూషణాచ్ఛాదనాసనైః ।
భూతికామైర్నరైర్నిత్యం సత్కారేణోత్సవేనచ ॥

எப்பொழுதும் ஸ்திரீகளை ஆபரணங்களினுலும் வஸ்திரங்களினுலும், சற்காரங்களினுலும், உற்சவங்களினுலும் பூஜிக்கவேண்டியது.

సంతుష్టో భార్యయా భర్తా భర్త్రా భార్యా తథైవచ ।
యస్మిన్నేతత్కులే నిత్యం కల్యాణం తత్ర వైధ్రువమ్ ॥

மனையாளால் கணவனும், கணவனுல் மனையாளும் எந்தக்குலத்தில் சந்தோஷத்தை யடைந்திருக்கின்ருர்களோ, அக்குலத்தில் எப்பொழுதும் சுபமே யுண்டாகிக்கொண் டிருக்கும்.

పితారక్షతి కౌమారే భర్తారక్షతి యౌవనే ।
పుత్రాశ్చ స్థావిరే భావేన స్త్రీ స్వాతంత్ర్యమర్హతి ॥

பாலியத்தில் தகப்பனும், யௌவனத்தில் புருஷனும், விருத்தாப்பியத்தில் புத்திரரும், பெண்களை ரக்ஷிக்கின்ருர்கள். பெண்கள் சுவாதந்திரியமாய் பொருள் தேடி ரக்ஷித்துக் கொள்ளக் கூடினவர்களல்லர்.

இப்படி அறியாதவர்கள், பெண்களை அடிமைகளாக நடத்துவதினுல் நமது தேசம் தாரித்திரத்தையடைந்தது. ஆகவே, புருஷர்கள் காமாதுரந்தரராய் வேறுபெண்களை நாடவும், பெண்களும் வியபசாரிக ளானுர்கள். அவர்களைப் பற்றிச் சொல்ல எம் நாவெழவில்லை. ஆயினும் விதியில்லை.

కామాన్మోహాత్తుయాగచ్ఛే త్త్యక్త్వాబంధూన్పతింసుతాన్ ।
సాతునష్టా పరేలోకే మానుషేషు విశేషతః ॥

பெண்கள் காமிகளாகவும், மோகிகளாவும் திரிவதால், அவர்கள் பந்துக்களாலும், புருஷர்களாலும், புத்திரர்களாலும் விடப்பட்டவர்களாய்,பரபுருஷர்களையிச்சிப்பதினுல் இகத்திலும் பரத்திலும் நஷ்டப்படுகிருர்கள்.

వ్యభిచారాత్తు భర్తుః స్త్రీలోకే ప్రాప్నోతి నింద్యతాం ।
సృగాలయోనిం ప్రాప్నోతి పాపరోగైశ్చ పీడ్యతే ॥

புருஷனைப்பார்க்கிலும் பரபுருஷனை யிச்சிக்கும் பெண்கள், இவ்வுலகத்தில் நிந்திக்கப்பட்டு, அநேக கெட்டவியாதிகளையநுபவித்து, பரலோகத்தை யடையாமல் நரகஞ்சேர்ந்து நரிசன்மத்தை யடைகின்ருர்கள்.

మానాద్రోషాన్మత్సరాద్వా భర్తారం యావమన్యతే ।
సాసప్త జన్మకం యావ న్నారకేస్యా న్నసంశయః ॥

மானத்தினுலாகிலும், ரோஷத்தினுலாகிலும், மாச்சரியத்தினுலாகிலும் புருஷனைவிட்டு, எந்த பெண் பரபுருஷனைச்சேர்ந்து அவமானமடைகின்ருளோ, அவள் ஏழுஜன்மத்தில் நரகத்தை யடைகின்ருள்.

தாய்வீட்டுப்பெண்.

(சுகுணபோதினி.)

இப்பெண் தன் தாய் வீட்டில் பிறந்ததுமுதல் மாமி வீட்டுக்குச் செல்லும்வரையில் யதேச்சையாகத் திரிந்து விளையாடிக் காலங் கழிக்கின்றாளென்பது அறிந்தவிஷயமே. பிறந்தபெண் என்றைக்காயினும் பிறன் மனைவியாக வேண்டுவதேயன்றிப்பிறிதில்லை. மழைக்காலத்துக்கு வேண்டியவைகளை வெயிற்காலத்தில் சேகரித்துக் கொள்வது மனிதர்களுடைய இயற்கை. அதுபோலப் பின்புகும் மனைக்கும் மணவாளனுக்கும்வேண்டுவதைப் பெண்ணாயினும் பெண்ணைப்பெற்றாராயினும் சம்பாதித்தும் சம்பாதிக்கச்செய்தும் வரவேண்டும். ஆனால் பேதைப்பெண்ணால் மேற்கண்டவைகளைச் சம்பாதிப்பது மிகுந்த கஷ்டம். பெற்றோரே சம்பாதிக்கச் செய்ய வழிவகைகளைக்கண்டு காட்ட வேண்டும். அவ்வழி வகைகள் கிடைத்தற்கு அருமையானவையும், தொடுத்தற்குத் துர்லபமானவையுமல்ல அவையென்னவெனில், குடித்தனப் பாங்கும், மரியாதையுமே. இவைகள் அப்பெண்ணுக்குக் கற்பிக்கப்படாமலிருப்பதே மாமிவீட்டாரால் பின் பலவித துன்பங்கள் செய்வதற்குக் காரணமாயிருக்கின்றது. சிலபெற்றோர்கள் தம்பெண்களுக்குஅவைகளைக் கற்பியாது செல்வமாக வளர்த்துப் பின்சீரழியவிடுகிறார்கள். தாய்வீட்டிலிருக்கும்போது யாரேனும் ஐயோ! இந்தப் பெண்ணுக்கு இக்கத்திரிக்காயை அரியத் தெரியவில்லையே, ஓர் படி அரிசி யரித்து உலையிற்போடத் திறமையில்லையேயென்று பெற்றோரைக் கேட்டால், இவைகளையெல்லாம் இவள் தன் மாமிவீட்டுக்குப் போய்க் கற்றுக்கொள்வாள் என்று சாக்கு போக்குச் சொல்லி ஜாடையாக இருப்பார்கள். இதனால் அவர்கள் செல்வச் செருக்கும் தெரியாமையும் தோன்றுகின்றது.

ஐயோ! அப்பெண்ணுக்கு நன்மைதருமென்று நினைக்கிற இதுபின்னர் துன்மையாக முடிகின்றதே. இவள் தன் மாமிவீட்டில் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் குற்றஞ்சொல்லிக் குரூர தண்டனை செய்யப்படுவாளே. அங்ஙனம் செய்யப்பெற்று வருத்தப் படுகையில் பெற்றோர்களும் மற்றோர்களும் அம்மாமி நாத்திகள் மேல் பழி கூறத் தலைப்படுகின்றார்கள். யாவரும் மூன்று பிழைகள் பொறுப்பது இயற்கை. அளவற்ற பிழைகள் செய்தால் யாவர் பொறுப்பர்? "சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற், பெரியோரப்பிழை பொறுப்பது மரிதே" என்ச் சொல்லப்பட்டிருக்கின்றதே. இது யார்மேற் குற்றமாக நினைக்கத்தக்கது. "வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம், வருத்தவளையாத மூங்கில், தரித்திரமாய்-வேழம்பர்கைப்புகுந்து மேதினியெல்லாம் திரிந்து தாழு மவர்தம் மடிக்கீழ் தான்" என்பதில், இளமையில் பல்லக்கு மேற்கொம்புக்கென்று வளைக்கப்பட்ட மூங்கிற் கொம்பானது, பின் இராஜர்களது முடிமேல் நின்று உயர்ந்து விளங்கும். இளமையில் வருத்தி வளைக்கப்படாத மூங்கில், கழைக்கூத்தாடிகள் காலில் அகப்பட்டு வருந்துகின்றது. அதுபோல பெண்கள் தம் தாய்வீட்டில் வருத்தப்படுத்தப்பட்டு வேலைகளைக் கற்றுக்கொள்ளாதபோது பின்னர் மாமி நாத்திகளால் வருத்த வருந்துவது தவிருமா? வேலை தெரியாதவனுக்குக் கூலி கிடைக்குமா? கணவனுக்கு இனிய உணவுகள்செய்து பரிமாறத்தெரியாதவள் மேல் அவனுக்குப் பிரியம் உண்டாகுமா? உபசரிக்க வகை அறியாதவள் உபசரிக்கப்படுவாளா? இன்பம் அனுபவிக்கப் பாத்திரமாவாளா? புத்தியிருக்குமானால் எல்லாம் கற்றுக்கொள்வாள் என்பார்கள். அது வாஸ்தவமே. கைப்பழக்க மின்றி அவ்வறிவு பயன்படுமா? சகலகலாபண்டிதன் ஒருவன், சித்திர மெழுத ஆரம்பிக்கின் அச்சித்திரம் எப்படி முடியும்? தாறுமாறாகவல்லவோ முடியும். "சித்திரமும் கைப்பழக்கம்" என்றிருக்கின்றதே. சமயலுக்குக் கைபாகம் இருக்கவேண்டுமென்கிறார்களே, அது என்ன? ஆகையால் உலகத்தில் எந்த வேலைகளுக்கும் அறிவும் கைப்பழக்கமும் வேண்டுவது ஆவசியகம். வீணை வாசித்தல் தையல் முதலிய தொழில்கள் எவ்வாறு நடக்கின்றனவென்பதை யோசிக்கவேண்டும். சமையல் வேலையும் அவற்றுள் ஒன்றுதான். இது கற்பிக்கபடாத பெண், கணவனுக்கு ஓர் புண் ஆம். மனிதர்களுக்கு உணவே பிரதானம். அவ்வுணவும் ருசிகரமாயிருந்தால் தான் மனதிற்கு மிகுந்த ஆனந்தம். இதனால் இகபோகங்கள்மீது விருப்பமும் தேகதாருட்டியமும் நடந்துவரும். இக்கருத்து கொண்டே திருவள்ளுவர் தம்மனைவி தேகவியோகமானபோது இரங்கிய பாடலின் முதலில் "அடிசிற்கினியாளே" என்று அருளிச் செய்தார். ஆகையால் தாய்மார்கள் தம்பெண்களுக்கு வீட்டுக்குடித்தன வகைகளையும் மரியாதைகளையும் தினந்தோறும் கற்பித்துவரக் கோருகிறேன். அடுக்களையிற் (அடுப்பு) போனால் மகளுக்கு உடல் கறுத்துப் போகுமென்றும், பிறர்க்கு மரியாதை செய்தால் தாழ்ந்து போவாளென்றும் நினைத்து சுத்த அவிவேகியாகச் செய்யக்கூடாது.

திருக்குறள் தாற்பரியம்.

(௧௫ - ம் பக்கத் தொடர்.)

கற்றதனா லாய பய னென்கொல்
வாலறிவ, னற்றா டொழா அ ரெனின்.

பொருள்.

வாலறிவன்=மெய்யறிவினை யுடையவனது
நற்றாள்=திவ்விய திருவடிகளை
தொழா அ ரெனின்=வணங்காராயின்
கற்றதனால்=மற்றைய கல்வியைக் கற்றதனால்
ஆய=உண்டாகிய
பயன்=பிரயோசனம்
என்=யாது? (ஒன்றுமில்லை.)

தாற்பரியம்.

சுத்தஞான சுரூபனாகிய கடவுள் திருவடிகளை அஞ்ஞானசம்பந்தமுடைய ஆன்மாக்கள் வணங்காது, உலகத்தில் அளவிலின்பத்தை யடைய பலகல்வியைக் கற்பதினால் உண்டாகும் பிரயோசனம் ஒன்றுமில்லை யாம்.

நாம் இகத்தின் சுகத்தையடைய கல்வியைக் கற்றும், அதனால் பூர்வபுண்ணிய வசப்படி வறுமையையும், சுகத்தையுமடைகின்றோமாயினும், அது பரத்தை யடைவிக்கும் கல்வியாகாது. ஆகவே, பரசுரூபனாகிய கடவுள் அடியைத் தொழும் கல்வியையும், அவ்வரம்பில் நிற்கும் ஒழுக்கத்தையும் கற்பதே பிரயோசனமாகும்.

உலகத்தில் பலகல்வியைக் கற்றனால் விசேஷ செல்வத்தை யடைந்தவர்களையும், அதிக தரித்திரத்தை யடைந்தவர்களையும், இவ்விரண்டுமென்றி மத்தியசுகமாகிய செல்வமும் வறுமையும் அடைந்தவர்களையும், நொண்டி, செவிடு, குருடு, கூன் முதலிய அங்கவீனர்களையும் காண்கின்றோம். இப்படியிருப்பதினால் அநேகபிறவிகளை யடைந்து வருகின்றோமென்பதை யூகிக்கிறோம். அப்பிறவிகளால் ஒருபிரயோசனமுமின்மையால் அப்பிறவிப்பிணியை யொழிக்கவே கடவுள் அடிகளை வணங்கவேண்டு மென்பதாம்.

மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்
நில மிசை நீடு வாழ்வார்.

பொருள்.

மலர்மிசை=(அடியாரது இதயமாகிய) தாமரை மலரிடத்து
ஏகினான்=சென்று வீற்றிருப்பவனது
மாணடி=மகிமை பொருந்திய திருவடிகளை
சேர்ந்தார்=அடைந்தவர்
நிலமிசை=இகத்துக்கு மேலான பரமபதத்திலே
நீடு=எக்காலமும் (அழிவில்லாமல்)
வாழ்வார்=வாழ்ந்துகொண் டிருப்பார்கள்.

தாற்பரியம்.

அடியார்கள் மனத்தைப் புறத்தேவிட்டு கடினமாக்காமல், எஞ்ஞான்றும் கடவுள் திருவடிகளையே நெஞ்சத்திருத்துவார்களாதலால், கடவுள் அவ்வடியார்கள் நெஞ்சந்தேடி குடிகொள்ளுவார். அத்தகைய நெஞ்சம் தாமரைமலர்போலு மிருதுவா யிருக்குமாதலால், அதை மலர் என்பது. கடவுள்நெஞ்சத்தில் எழுந்தருளவும் வினையாவும் அறுந்துவிடும். விடவே, அடியார்கள் கடவுளோடு கூடிவாழும் மோட்சத்தை யடைவார்கள்.

கடவுள் அன்பரது நெஞ்சத்தில் எழுந்தருளியிருக்கிறா ரென்னு மிடத்தில், அன்பில்லாதவர் நெஞ்சத்தில் இராரோ என விளங்குகின்ற தென்று சிலர் அவர் பரிபூரணத் தன்மைக்குத் தோஷம் கற்பிக்கப் படுகிறதே என்பர். அங்ஙன மன்று. அவர் எங்கும் நிறைந்த பூரணரே. அவருடைய இருப்பு அன்பரிடத்து மலர்மேலிருப்பதுபோலும், அன்பில்லாதவரிடத்து முள்ளின்மே லிருப்பதுபோலும் ஆம். இதனால் அன்பரிடத்துக் கிருபையும், அன்பில்லாதவரிடத்துக் குரூரத்தையும் புரிவாராயிருப்பர் என்பதாம்.

ஆகையாலே, "மன்னக மலமற மலர்மிசை யெழுதரும்", "அகம்படிவந்து புகுந்தான்", "என னுட்கலந்தான்", "எங்கணுநிறைந்த வெந்தாய்" முதலிய வாக்கியங்களாலே கடவுள் அந்தரியாமியாய் எழுந்தருளி யிருக்கும் இருப்பை பெரியோர்கள் புகழ்ந்திருக்கின்றார்கள். இவற்றால் இடைவிடாது கடவுள் திருவடிகளைத் துதித்து பேரின்பத்தை யடையவேண்டு மென்பது இனிது பெறப்பட்டது.

ஔவையார் நீதிவாக்கியம்.

(௧௬ - ம் பக்கத் தொடர்.)

சான்றோ ரினத்திரு.

பொருள்.

சான்றோர்=பெரியோருடைய
இனத்து=கூட்டத்திலே
இரு=நீ யென்றைக்குஞ் சேர்ந்திரு.

கருத்து.—விவேகிகளாகிய பெரியோர்பக்கல் சேர்ந்திருந்தால், பகைவர்களால் இடையூறின்றி வாழலாமென்பதாம்.

குறளுதாரணம்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக் கிடந்த தில்.

பொருள்.

தக்காரினத்தனாய்=யோக்கியராகிய இனத்தினை யுடையவனாகி
தானொழுக=தானும் (அறிந்து) நடக்க
வல்லானை=வல்ல அரசனை
செற்றார்=பகைவர்
செயக்கிடந்தது=செய்யவிருந்த ஒரு துன்பமும்
இல்=இல்லை.

கருத்து.—அறிவு ஒழுக்கங்களாலே தகுதியுடையாராகிய அமைச்சர், அந்தணர், பண்டிதர்கள் கூடிய அரசன், அவர்கள் ஆலோசனையைக் கொண்டு அற நீதிகளின் வழி தவறாது நடந்து வருவானாயின், சாமம், பேதம், தானம், தண்டம் என்கிற நான்கு உபாயங்களால் பகைவர் செய்யும் வஞ்சனை, கூடினவரைப் பிரித்தல், வேறு பகைவிளைத்தல், வலிமை காண்பித்தல் முதலியவற்றினின்று தப்பித்துக்கொள்ளும் வழியை யறிவானாகையால், பகைவர் செய்யத்துணிந்த எத்துன்பமும் பலனிற்செயலாய்முடியுமென்பதாம்.

சித்திரம் பேசேல்.

பொருள்.

சித்திரம்=எழுதிய சித்திரம்போலவே யடங்கி
பேசேல்=ஒன்றையும் பேசாதிரு.

கருத்து.—அச்சான்றோர் கூட்டத்திலே நீ யிருக்கும்போது "சித்திரப்பாவை யினத்தகவடங்கி" என்பதுபோல், சுவற்றில் எழுதிய சித்திரப்பதுமைபோ லிருந்து, ஒன்றையும் பேசாதிரு.

குறளுதாரணம்.

நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு.

பொருள்.

முதுவருள்=அறிவு மிகுந்தவர் கூட்டத்தில்
முந்து=முற்பட்டு
கிளவா=(ஒன்றைச்) சொல்லாத
செறிவு=அடக்கம்
நன்றென்றவற்றுள்ளும்=நல்லதென்னுங்குணங்கள் பலவினும்
நன்றே=நல்லதாகும்.

கருத்து.—அறிவுடையோர் சபையில், அவர் முன்னர் முந்தி ஒன்றைச்சொல்லாத அடக்கமானது ஒருவர்க்கு இதுநல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் பலவினும் நல்லதாகும். அறிவு மிகுதியுடையோர்முன் அறிவிலார் தங் குறைவையோராது, முந்திப்பேசுவாராயின் இழுக்கு அடைவாராதலின், அடங்கி யிருப்பதே நலமாம். ஆகவே அவ்வறிவுடையோர் வாக்கின் திறமையைக் கேட்டு, தங்குறைவுநீங்கி தெளிவுடையவராவார் என்பதாம்.

கட்டுக்கதைகள்.

கிழநாயும் அதின் எஜமானும்.

ஒரு கிழநாய் அதின் வாலிபகாலத்தில் தன் எஜமானை அநேகஞ் சந்துஷ்டியான வேட்டைகளுக்கு இட்டுக்கொண்டு போனதுமன்றி, ஒரு விசுவாச முள்ள ஊழியனைப்போல் எல்லா நல்ல ஊழியங்களையும்அவனுக்குச்செய்து, கடைசியில் அதின் சுபாவீகமான பலனுஞ் சுறுசுறுப்புங் குறைந்துபோனபடியால், அவன் அதைத் தூஷித்து வீட்டைவிட் டடித்துத்துரத்த, நாயானது ஏன் ஐயா! என்பலன் குறைந்துபோனதே யல்லாமல் என்மனம் எப்போதும்போலவே நன்றாயிருக்கின்றது. இப்போது பலனற்றிருக்கிறேனென்று என்னை யெந்த நீதியோ டடிக்கிறீரோ, அந்த நீதியைக்கொண்டே கிழமாய்ப்போனேன் என்று என்னைத் தூக்கிப்போடலாமேயென்றது.

நீதி.

வயதுமுதிர்ந்த விசுவாசமுள்ள ஊழியக்காரர்களின் துர்பலத்தைப்பற்றி அவர்களையிகழுவது இரக்கமில்லாத நன்றியற்ற தன்மையாம்.

ஒருகழுதையும், வாலில்லாக்குரங்கும், அகழெலியும்.

ஒரு கழுதையும் வாலில்லாக்குரங்கும் ஒன்றினோடொன்று தங்கள் மனக்குறைகளைக் குறித்து முறையிடுகையில், கழுதை தனக்குக் கொம்புகளில்லையென்று விசனப்பட, குரங்கு தனக்கு வாலில்லையென்று வருத்தப்பட்டது. அச்சமயத்தில் அகழெலியானது, உங்கள் மனக்குறைகளை நிறுத்துங்கள். ஏனெனில், எளிய கண்ணில்லா அகழெலிகள் உங்களிருவரையும் விட மிகவுந்துன்பமான ஸ்திதியி லிருக்கிறபடியால் உங்களுக்கிருக்கிறவரையில் நன்றியறிந் திருங்களென்றது.

நீதி.

நம்மை யுண்டாக்கினவர் நமக்கெது தகுதியாயிருக்குமோ அதை யறிவார். அவனவனுடைய அமைப்பு, சந்தேக மில்லாமல் அவனவனுக்கு நன்மையாயிருக்கின்றது.